பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 11 வெள்ளிக்கிழமை 26.05.2023 கதிர் 197

# மகாவலி 'ஜே' வலயம் உருவாக்க தமிழ் அரசுக் கட்சி கடும் எதிர்ப்பு

### சிங்களப் குடிப்பரம்பலை விரிவுபடுத்தும் திட்டம் என்று சாள்ஸ் எம்.பி. சபையிலல் சாடல்



வடக்கு மாகாணத்தில் உள்ள 37 கிராம சேவகர் பிரிவுகளைஒன்றிணைத்து மகாவலி 'ஜே' வலயம் ஒன்று உருவாக்கப்படுவதற்குதமிழ்அரசுக்கட்சி கண்டித்துள்ளது. இது சிங்களக்குடிப்பரம்பலை விரிவுப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றும் அது விமர்சித்துள்ளது. .

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை கொண்டு வந்து உரையாற்றிய கட்சியின் வன்னி மாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இப்படித் தெரிவித்தார்.

☞ 2


## இது ரகசியம் அல்ல!

பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கிக்கொண்டு தவித்தபோது 500 மில்லியன் டொலர் வரையில் பணம் கொடுத்து உதவியநாடுபங்களாதேஷ். இத்தனைக்கும் அங்கும் பொருளாதாரச் சிக்கல்தான். இருந்தாலும் இலங்கையளவுக்கு நொடிந்து போகவில்லை என்பதால் ஆபத்திற்குக் கை கொடுத்தது. இருப்பினும் அங்கும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள் தேர்தலை நடத்தி தோற்றுப் போக விரும்பாத ஆட்சியாளர்கள், ரணிலைப் போலவே வாக்களிப்பைப் பிற்போட்டு வருகின்றார்கள்.

இதனை அடுத்து ஆத்திரப்பட்ட அமெரிக்கா, தேர்தலைப் பிற்போடுவதற்குக் காரணமாக இருக்கும் பபங்களாதேஷ் நாட்டவர்கள், அவர்கள் அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி இனி அமெரிக்காவுக்குள் நுழைய

☞ 2

## யாழ் .நகரில் வாள்வெட்டு நேற்றிரவு இருவர் காயம்



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றிரவு இருவர்வாளால்வெட்டிக்காயப்படுத்தப்பட்டனர். இந்த வாள்வெட்டினால் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள ஜூஸ் கடை நடத்துவோர் மீதே அடையாளம் தெரியாத குழு ஒன்று இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலை நடத்திய வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)

### சிறுமியைத் துன்புறுத்திய

## இராணுவக் கோப்ரலுக்கு 15 ஆண்டுகள் சிறைவாசம்

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

ஆறு வயது பாடசாலை மாணவியை கடத்தி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி இராணுவச் சிப்பாய்க்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது வவுனியா மேல் நீதிமன்றம்.

இந்த வழக்கில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் நேற்று தீர்ப்பிடப்பட்டது.

10 வருடங்களின் முன்னர் 14.05.2013 அன்று பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய சிறுமியைக் கடத்திச் சென்று பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்று நெடுங்கேணி இராணுவ முகாமைச் சேர்ந்த கோப்ரல் மீது சட்ட மா அதிபரினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

மாணவி வெள்ளை சீருடையில் இரத்தம் படிந்த நிலையில் காட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டமை, விசேட பொலிஸ் புலனாய்வு அணி இராணுவ சிப்பாயை கைது செய்தமை, கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாயை அடையாள அணி வகுப்பில் சிறுமி அடையாளம் காட்டியமை, நெடுங்கேணி விஜயபாகு இராணுவ முகாம் கட்டளை அதிகாரி நீதிமன்றிற்குச் சாட்சியமளித்தமை, காட்டுக்குள் இருந்து சிறுமியின் சப்பாத்துக்கள் மீட்கப்பட்டமை, இறுதியாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை என்பவற்றை வைத்து கைது செய்யப்பட்ட நெடுங்கேணி விஜயபாகு இராணுவ முகாமின் இராணுவக் கோப்ரலை குற்றவாளி என நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

☞ 2

## ரஹீம் எம்.பிக்கு ஆகக்குறைந்த தண்டம் விதிக்கப்பட்டது ஏன்?

### நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி

பெருந்தொகைத் தங்கம் மற்றும் திறன்பேசிகளைச் சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிற்கு ஆகக் குறைந்த தண்டப்பணம் விதிக்கப்பட்டது ஏன் என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளன.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இடம்பெற்ற நிதி ஒழுங்குபடுத்தல் கட்டளைகள் தொடர்பானவிவாதத்தைத்தொடக்கி வைத்து உரையாற்றிய பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய 3,5 கிலோ தங்கம் மற்றும் 96 ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் ஆகியவற்றை சட்டவிரோதமாக கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக கொண்டு வந்த குற்றத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரிரஹீம்ஏற்றுக்கொண்டார். அதனால்தான் அவருக்கு 75 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அரசு அவருக்கு உதவவில்லை அதனால் அரசுக்கு எதிராக வாக்களித்தேன் என அவர் கூறியதையிட்டுநாம்பெருமையடைகின்றோம் என குறிப்பிட்டார்.

இதன் போது குறுக்கிட்ட பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொது செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார. 3,5 கிலோ கிராம் தங்கம் மற்றும் 96 தொலைபேசிகளை சட்ட விரோதமாக கொண்டு வந்த குற்றத்துக்காக நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிற்கு 75 இலட்சம் ரூபாவே தண்டம் விதிக்கப்பட்டது. இது மிகவும் குறைவானது.

சுங்க சட்டத்தின்படி கொண்டு வந்த பொருட்களின் பெறுமதியை விடவும் 3 மடங்கு அதிக தண்டம் அறவிடப்பட வேண்டும். ஆனால் அப்படி நடைபெறவில்லை - என்றார்.

இதற்குப் பதிலளித்த பதில் நிதி அமைச்சரான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தண்டப் பணத்தில் ஆகக்கூடிய தண்டப்பணம் விதிக்கப்பட்டுள் ளது.

இலங்கையில் இது வரை சட்டவிரோதமாகப் பொருட்களை கொண்டு வந்த வர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டப் பணத்தில் அலி சப்ரி ரஹீமிற்கு விதிக்கப்பட்ட தண்டப்பணமேஅதிகூடிய தொகையாகக் கருதப்படுகிறது - என்றார்.

இதன்போது எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்த ஆட்சிக்கு எதிராக வாக்களித்துவிட்டார்என்பதற்காகஅவரை எதிர்க்கட்சியாக்க வேண்டாம். அப்படிப்பட்டவர்எமக்குதேவையும் இல்லை. அவர் இப்போதும் இந்த ஆட்சியின் பிரதிநிதியாக புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக செயற்படுகின்றார்.

☞ 2

## தையிட்டி விகாரை நேற்றுக் அதிகாலை திறந்து வைப்பு

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை நேற்று அதிகாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. படையினர் மற்றும் வேறிடங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட நபர்களுடன் இந்த விகாரைத் திறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத விகாரையை அகற்ற வலியுறுத்தி அதன் முன்பாக தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் போராட்டம் இடம்பெற்று வரும் நிலையிலும் காலை 5.30 மணியளவில் பெரியளவில் ஆர்ப்பாட்டங்கள் இன்றி விகாரை திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த 9 பேர் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு புதன்கிழமை விடுவிக்கப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனையும் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று கைது செய்ய முற்பட்ட பின்னர் அவரை விடுவித்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது விகாரையில் மே 25 முக்கிய நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் அதனைக் குழப்புவதற்கே

☞ 2

## புவிசார் ஒழுங்கில் ஆசியாவின் வகிபாகத்தை ஒழுங்குபடுத்தக் குரல் கொடுக்கவேண்டும்

### ஜப்பான் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

பூகோள புவிசார் அரசியல் செயற்பாடுகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் பிராந்தியத்தின் வகிபாகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஆசிய நாடுகள் குரல் எழுப்ப வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஜப்பானின் டோக்கியோ நகரில் நேற்று ஆரம்பமான ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 28ஆவது சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் பிரதிப் பிரதமர்கள் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசியாவின் பன்முகத்தன்மை, பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கும் காரணியாகும். அது கருத்திற் கொள்ளப்படவேண்டிய உலகளாவிய சக்தியாகும். ஆசிய - பசுபிக் பிராந்தியமானது ஒரு கட்டமைக்கப்பட்ட பிராந்திய அமைப்பாகும். இந்து சமுத்திர வலயமானது வளர்ந்து வரும் பிராந்தியம்.

1955ஆம் ஆண்டு பெண்டுங்கில் நடைபெற்ற ஆசியா - ஆபிரிக்க உச்சி மாநாட்டிலும் இந்து சமுத்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திலும் இந்து சமுத்திர பிராந்தியம் அமைதிப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தோ - பசிபிக்பிராந்தியதொடர்புகளை மேம்படுத்துவதில் இலங்கை உறுதிப்பாட்டை கொண்டிருக்கும்.

ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவின் 'அமைதிக்கான கொள்கைகள் மற்றும் செழுமைக்கான சட்டங்கள்' கொள்கைக்கு எனது முழு ஆதரவை அளிக்கவுள்ளோம். அநேகமான நாடுகள் ஆசியாவின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்க தீர்மானித்துள்ளோம். உலக வல்லரசுகளின் போட்டியில்

☞ 2

## ஏணிப்படி பொருத்திய வழக்கிலிருந்து வெடுக்குநாறி நிர்வாகத்தினர் விடுவிப்பு

வவுனியா வெடுக்குநாறி மலையில் ஏணிப்படி பொருத்தியமை தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இருந்து ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வெடுக்குநாறி மலையில் தொல்பொருள்களுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பாகத் தொல்பொருள் திணைக்களத்தின் முறைப்பாட்டுக்கு அமையத்தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நேற்று வவுனியா நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை தொடர்ந்து நடாத்துவதற்கு போதிய சான்றுகள் இன்மையால் குறித்த வழக்கில் இருந்து ஆலயப் பூசகர் மற்றும் நிர்வாகத்தினரை விடுவிப் பதாக நீதிபதி அறிவித்தார்.

இது குறித்து ஆலய நிர்வாகம் சார்பாக ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரணி அருள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது, 2019ஆம் ஆண்டு ஆலயத்தில் மரத்திலான ஏணிப்படி ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அதனை சீரமைத்து ஏணிப்படி ஒன்று அமைக்கப்பட்டமை தொடர்பாக வழக்குத் தாக்கல்

☞ 2

## ஜப்பானிடம் கவலை தெரிவித்தார் ரணில்



ஜப்பான் உதவியுடன் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டு வந்த இலகு ரயில் வேலைத்திட்டத்தினை இடைநடுவில் கைவிட்டுச் சென்றமைக்காக ஜப்பானிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்தார்.

இருதரப்பினரதும் இணக்கப்பாடு இல்லாமல் பெரும் திட்டங்களுக்கான இருதரப்பு ஒப்பந்தங்களை இடைநிறுத்துவதை தவிர்ப்பதற்கு அவசியமான சட்டதிட்டங்களை உருவாக்க எதிர்பார்ப்பதோடு, பெரும் திட்டங்கள் குறித்த பரிந்துரைகள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை கட்டாயப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

ஜப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றையதினம் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடாவை டோக்கியோ நகரில் சந்தித்து

☞ 2

### தையிட்டியில் போராட்டம் நடத்திய

## கஜேந்திரன் எம்.பியைப் பொலிஸார் தாக்கியது குறித்து விசாரணை தேவை

### சபாநாயகரிடம கஜேந்திரகுமார் வலியுறுத்து



தையிட்டியில் போராட்டம் நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கு எதிராக பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற் றும் முன்னணியின் தலை வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

தையிட்டி பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது, அங்கே

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றுதிடீர் அறிவிப்புஒன்றை விடுத்தது.

பங்களாதேஷில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது தொடர்பாக அமெரிக்க இரா ஜாங்கச் செயலாளர் அண்ரனி பிளிங்கன் புதன் கிழமை தீவிர அறிக்கை ஒன்றை வெளியிட்டார். பங்களாதேஷுக்கு விசாவைக் கட்டுப்படுத்தும் புதிய கொள்கையை அமெரிக்கா கடைப்பிடிப்பதாக அவர் அறிவித்தார்,

அமெரிக்காவின் இந்தப் பகிரங்க அறிவிப்பால் ஆடப்போனபங்களாதேஷ்இப்போது உடனேதேர்தலைநடத்துவது தொடர்பாக அறிவித்துள்ளது.

தேர்தலைநடத்துவதற்கு இருக்கும் சட்டவிரோத நடைமுறைகள் அல்லது குறுக்கீடுகளைத் தடுக்கவும், நிவர்த்தி செய்யவும் அரசு இயந்திரம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று பங்களாதேஷ் அயலுறவு அமைச்சகம் பதிலளித்துள்ளது.

தேர்தல் செயல்முறை, தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பார்வையாளர்கள் உட்பட கடுமையானகண்காணிப்பின் கீழ் இருக்கும் என்று அது ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையும் உள்ளூராட்சித் தேர்தல், மாகாண சபைத்தேர்தல்என்பவற்றைப் பிற்போட்டு வருகின்றது. பங்களாதேஷுக்கு அடுத்து அமெரிக்காவின் இலக்கு இலங்கையாக இருக்குமோ என்கிற அச்சம் இப்போதே கொழும்பில் பரவத் தொடங்கியிருக்கிறது. பார்ப்போம் என்ன நடக்கிறது என்று.

*****

நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தியப் பயணம் விரைவில் சரிவரும் என்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இலங்கையின் அரசியல் பிரச்சினை, அதிகாரப் பகிர்வு ஆகிய விடங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு கூட்டமைப்பின்ர் வாய்ப்புக் கேட்டிருந்தபோதும் நீண்ட நாட்களாக அது கிடைக்கவில்லை. அதற்கு முன்னர் மோடியைச் சந்திக்க வருமாறு இந்தியா அழைப்பு விடுத்தபோது தனது உடல் நிலையைக் காட்டி அந்தச் சந்திப்பைச்சம்பந்தன்தவிர்த்திருந்தார். அதன் பின்னர் புதுடில்லிக்குச் செல்வதற்கான வாய்ப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கவில்லை.

இப்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், விரைவில் தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள் இந்தியா சென்று பிரதமரைச் சந்திக்கவாய்ப்புக்கிட்டியுள்ளது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. விரைவில்சந்திப்புஇடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- இடிமின்னல் -

## மகாவலி 'ஜே' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2007 மகாவலி அதிகார சபையின் 'எல்' வலயத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் பறிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் ஊடாகச் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மகாவலி அதிகார சபை ஊடாக முன்னெடுக்கப்படும் சிங்கள குடியமர்வு செயற்பாடுகளை நாடாளுமன்றத்தின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

மகாவலி 'எல்' வலயம் மீளப்பெறப்பட்டு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவேண்டும், மகாவலி அதிகார சபைக் காணிகள் பிரதேச சபைக்குப் பொறுப்பாக்கப்படவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தோம். இந்த நிலையில் மகாவலி 'ஜே' வலயத்தை உருவாக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

1985ஆம் ஆண்டுக்கு பின்னர் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்புதிணைக்களம் வெளியிட்ட வர்த்தமானிகளை மீள் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி உரிய அமைச்சுகளுக்குபணிப்புரை விடுத்தார். ஆனால் தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளை புதிதாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. சிங்களவரின் பரம்பலை விரிவுப்படுத்தும் செயற்பாடுகளில் மகாவலி அதிகார சபை ஈடுபடுகின்றது. இவற்றை மகாவலி அதிகார சபை கைவிட வேண்டும்.

மாந்தை கிழக்கு பிர தேச செயலக பிரிவில் உள்ள அம்பாள் புரம், கரும்புள்ளியான், கொள்ளிவிலாங்குளம்,கொம்பு முறிப்பு, நெட்டாங்கண்டல், ஒட்ட றுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம்,பொன்னகர், பூவரசம் குளம், செல்வபுரம், சிராட்டிக்குளம், சிவபுரம், வன்னிவிலாங்குளம், விநாயகபுரம், ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும், அதேபோல் அனிச்சங்குளம், பாரதிநகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம் மத்தி, யோகபுரம் கிழக்கு ஆகிய 07 கிராம அலுவலர் பிரிவுகளையும், மாந்தை மேற்கில் உள்ளபாலியாறு, அந்தோணியார்புரம், ஆத்தி மோட்டை, இலுப்பக்கடவை, கள்ளியடி, கூறாய், கோயிற்குளம், காயாநகர், பெரியமடு ஈஸ்ட், பெரியமடு வெஸ்ட், பல்லமடு, வெடுத்தல்மடு ஈஸ்ட், நோர்த், உள்ளடங்களாக 15 கிராம சேகவர் பிரிவுகளையும் இணைத்து 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒன்றிணைந்து மகாவலி 'ஜே' வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலங்கள் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் இந்தச் செயற்பாட்டை ஏன் கவனிக்கவில்லை? வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி விடுவிக்கப்படும் என சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு மகாவலி அதிகார சபை ஊடாக காணிகளை தொடர்ந்து கையகப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் சகல பகுதிகளிலும் குடிகொண்டுள்ளார்கள். இராணுவ முகாம்களில் புத்தர் சிலை வைக்கப்படுகிறது, விகாரைகள் கட்டப்படுகின்றன. தமிழர் பகுதியில் பௌத்த மயமாக்கல் தற்போது இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. இந்தநாட்டில் பல்லின சமூகத்தின் உரிமைகள் பெயரளவில் மாத்திரமே கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆட்சியாளர்களும் எமது விடயத்தில் பார்வையற்றவர்களாக உள்ளார்கள்.

இராணுவமயமாக்கல் ஊடாக பௌத்த மயமாக்கலையும், மகாவலி அதிகார சபை ஊடாக சிங்களப் பரம்பலை விரிவுப்படுத்தும் செயற்பாட்டையும் இந்த ஆட்சி உடனடியாக இடைநிறுத்தவேண்டும் - என்றார்.

## தையிட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவர்கள் முற்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். இதையடுத்து விகாரையில்வழிபாடுகளைக் குழப்பாமலும் விகாரைக்குச் செல்வோரின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடாது என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

இதையடுத்து அந்த இடத்தில் தொடர்ந்தும் போராட்டம் இடம்பெறுகின்றது.

## இராணுவக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவருக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட மாணவிக்கு 5 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் உத்தரவிட்டார். இழப்பீடுவழங்கத்தவறின் இரண்டு ஆண்டு கடூழிய சிறைத் தண்டனைக்கு உட்படுத்தவும் மற்றும் தண்டப்பணம் பத்தாயிரம் ரூபா கட்டத்தவறின் இரு மாதம் கடூழிய சிறைத்தண்டனைக்கு உட்படுத்தவும் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டது.

## ரஹீம் எம்.பிக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவரின்அந்தபதவிதொடருமா ?என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, இவ்விடயம் தொடர்பில் சபாநாயகர் ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்பார் - என்றார்.

## புவிசார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆசிய நாடுகள் பக்கம் சாய்வதைத் தவிர்த்துள்ளன.

சீனாவுடன் நிலையான உறவைக் கட்டியெழுப்புவதற்கு ஜப்பான் ஜி - 7 ஒத்துழைப்பு அணுகுமுறையின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. 'சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ - பசிபிக்' பிராந்தியத்திற்கானஜப்பானின்நோக்கிற்கு ஆதரவளிக்கின்றோம். பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு ஆசியநாடுகளிடையேதிறந்த உரையாடல் அவசியமாகும்.

உலக நிலப்பரப்பில் சுமார் 30 சதவீதத்தையும் 4.75 பில்லியன் மக்கள் தொகையை அல்லது உலக மக்கள் தொகையில் 60 சதவீதத்தையும் உள்ள ஆசியா, உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது.

ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற வளர்ந்த பொருளாதாரங்களின் பங்களிப்புடன், சீனாவின் முன்னேற்றம் மற்றும் இந்தியாவின் வளர்ந்து வரும் உள் நாட்டு கேள்வி என்பன பிராந்தியத்தின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும்.

'2050இல் உலகம்' என்ற பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் அறிக்கையின்படி உலகின் முதல்10 பொருளாதாரங்களில் ஆசிய நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்வுகூறியதோடு அவற்றில் நான்கு நாடுகள் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும்

இது தவிர, வியட்நாமும் பிலிப்பைன்ஸும் முதல் 20 நாடுகளிடையே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுடன் ஒப்பிடக்கூடிய பொருளாதாரத்தைக்கொண்ட ஆசியா, உலகளாவிய பொருளாதார சக்தியாகவும், மிகவும் செயற்திறனான பிராந்தியமாகவும் மாறியுள்ளது

ஆசியாவில் செல்வந்த மற்றும் வறுமையான பொருளாதாரங்கள், பெரிய உப கண்ட வல்லரசுகள் மற்றும் சிறிய அரசுகள் உள்ளடங்குகின்றன. இந்தப் பன்முகத் தன்மை பிராந்தியத்தின் நிலையை உலகளவில் பலப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், சீனாவின் துரித எழுச்சி மற்றும் சர்வதேச அரங் கில் சீனாவின் பங்கு தொடர் பில் அமெரிக்காவிற்கும் சீனாவுக்கும் இடை யில் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமை உருவாகியிருப்பதால்கடுமையான சூழ்நிலையும் போட்டித்தன்மையும்ஏற்பட்டுள்ளது.

தற்போதுள்ள சவால்களின்அடிப்படையில்இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன. முதலாவதாக, ஆசியாவில் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான குழப்பமாகும். அரசியல் முறைமைகளிலுள்ள மாற்றம், மனித உரிமை தொடர்பில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் புரிதலின் பன்முகத்தன்மை அவசியமாகும்.

அடிப்படை அரசியல் விழுமியங்களில் ஒருமித்த கருத்தை எட்டும்போது நாடுகளின் பல்வேறு பின்னணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது முக்கியமாவதோடு, சட்ட அடிப்படையிலானதிட்டத்திற்கானவிதிகளைப் பின்பற்ற வேண்டும். இந்த சட்டவிதிகளை தொடர்ச்சியாக பின்பற்றுமாறு மேலைத்தேய நாடுகளை கோருகின்றேன்.

இரண்டாவது பெரிய சவாலாக இருப்பது காலநிலை மாற்றம், ஆசியாவிற்கான குறிப்பிடத்தக்கஅச்சுறுத்தலாக இருக்கிறது. ஆசியப் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் வெப்பநிலை உயர்வு காரணமாக கடுமையான வானிலை மாற்றங்கள் மற்றும் கடல் மட்ட உயர்வுஆகியவைஆசிய நாடுகளின் வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதியைப் பாதிக்கும். மாலைதீவுகள், பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, மியான்மார், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் உட்பட, பருவநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள பதினைந்து நாடுகளில் எட்டு நாடுகள் ஆசியாவில் உள்ளன.

உலகளாவிய காபன் வெளியேற்றத்திற்கு ஆசியா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. ஆசியா உலகின் காபன் உமிழ்வில் சுமார் பாதியை உற்பத்தி செய்கிறது. பெரும் பசுமை இல்ல வாயு உமிழ்வு மேற்கொள்ளும் 5 நாடுகளைக் கொண்டுள்ளது. காலநிலை மாற்றத்தின் சவால்களைக் குறைப்பதற்கான பாரிஸ் உடன்படிக்கையை இப்பகுதியில் உள்ள பல நாடுகள் ஏற்கனவே கடைப்பிடித்துள்ளன. அந்த நாடுகள் அனைத்தும் அதற்காக அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளன.

மேலும் பிராந்தியத்தில் உள்ள சில தொழில்மயமான நாடுகள் அங்கீகரிக்கப்பட்ட குறுகிய காலக்கெடுவின் அடிப்படையில் காபன் நடுநிலையை பேணவதற்கு அவகாசம் வழங்க ஆசியாவும் உடன்பட வேண்டும்.

போதியளவான நிதி இல்லாமையின் காரணமாக ஆசிய வலயத்தில் கால நிலை அனர்த்தங்கள் உக்கிரமடைந்துள்ளன. அதற்கான தீர்வுகளை கண்டறிவதற்கு ஆசிய நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாவதோடு, எதிர்வரும் மாநாடுகளில் ஆசிய நாடுகளின் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியதும் அவசியமாகிறது. பிரதான ஆசிய நாடுகள் ஒருமித்த நிலையாட்டை எட்டும் போது தான் மாநாட்டின் சாத்தியத்தை கண்டுகொள்ள முடியும்.

கொவிட் - 19 தொற்று பரவல் காரணமாக கடன் நிலைத்தன்மை பிரச்சினைக்கு ஆசிய நாடுகள் முகம்கொடுத்து வருகின்ற நிலையில் இலங்கை அதில் முன்னணி வகிக்கின்றது. இடைநிலை வருமானம் ஈட்டும் நாடு என்ற வகையில் கடன் நிலைத்தன்மை தொடர்பிலான கால தாமதத்தை நிவர்த்திக்க வேண்டியது அவசியமாகும். அதற்கான கடன் மறுசீரமைப்பை மாத்திரமே தீர்வாக கொண்டுள்ள இடைநிலை வருமானம் ஈட்டுகின்ற நாடுகள் அதற்கான இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்கின்றன.

அதற்கமைய இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை மட்டத்திலான ஒப்பந்தத்தை 2023 மார்ச் மாதத்தில் மேற்கொண்டிருந்த அதேநேரம் அதன் கீழ் 3 மில்லியன் நீட்டிக்கப்பட்ட கடன் தொகையினை பெறுவதற்கான அனுமதியினை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையிடமிருந்து பெற்றுக் கொண்டது.

தற்போது கடன் வழங்குநர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ள இலங்கை 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதனை வெற்றிகரமாக நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கு பலதரப்பு பிரதிநிதித்துவ நிறுவனங்கள், பரிஸ் சமவாயம், இந்தியா, சீனா தனியார் கடன் வழங்குநர்களும் பங்களிப்புச் செய்கின்றனர் என்பதோடு, இலங்கைக்கு இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு இடைநிலை வருமானம் ஈட்டும் நாடுகளின் கடனுதவிக்காக பலதரப்பு தொடர்பாடல்களை உறுதி செய்ய சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பயன்படுத்த முடியும்.

பொருளாதார நிர்ப்பந்தங்கள் மற்றும் பொருளாதார தொடர்பாடல்களை நிராகரிப்பதன் மூலம் உலகவர்த்தக அமைப்பின் நிலைப்பாடு அல்லது சுட்டத்திட்டங்களுக்கமைய பலதரப்பு வர்த்தக முறைமையை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

அதற்கமைய பிரிவினையை எதிர்த்தல் மற்றும் பொருளாதாரத்திற்கு முகம்கொடுக்கும் தன்மை, பாதுகாப்பு தொடர்பிலான உத்திகளுக்காக ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற ஜி - 7 மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை வரவேற்கின்றோம். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், உலகளாவிய பங்காளர்கள் உடன் கலந்துரையாடலில் ஈடுபடவும் ஒத்துழைப்பான பிரவேசத்தை பின்பற்றவும் ஜி -7 நாடுகள் தீர்மானித்துள்ளது முக்கியமானதாகும்.

உக்ரேன் போர் தொடர்பில் ஆசிய மக்கள் பல்வேறு நிலைப்பாடுகளை கொண்டுள்ள நிலையில் சில தரப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளை நேரடி ஆக்கிரமிப்பாகவும் அத்துமீறலாகவும் கருதுகின்றோம். சிலர் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி அதனை தடுக்க முடியாமல் இருக்கின்ற ஐரோப்பாவின் இயலாமை ஆகியவற்றினால் உருவாகியுள்ள மிகப் பெரிய பிரச்சினையாக இதனைக் கருதுகின்றனர். எவ்வாறாயினும் இந்த பிரச்சினைகளை நிறைவுக்கு கொண்டுவரவேண்டுமெனில் புரிந்துணர்வுடன் கூடிய கலந்துரையாடல் அவசியமாகும்.

ஐக்கியஇராச்சியம்மற்றும் சீனாவிற்கு இடையிலான மோதல்கள் தீர்க்கமான ஒன்றாக மாறியுள்ளதாகவும் அண்மைக் காலமாக மேற்படி மோதல் நிலைமைகள் அதிகரித்து வருகின்றமையின் காரணமாக ஒரு புறத்தில் குவாட் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் வலயமொன்றும் மறுபக்கம் இந்து பசுபிக் வலயம் மற்றும் ஒரே மண்டலம் மற்றும் பாதை என்பன உருவாகியுள்ளன.

ஐக்கிய இராச்சியம் - சீனா உள்ளிட்ட நாடுகளுக்கிடையிலான எதிர்மறை செயற்பாடுகளின் போது இரு இராச்சியங்களில் ஒன்றை தெரிவு செய்யுமாறு ஆசிய நாடுகளை பலவந்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆசியான் நாடுகள் மற்றும் சீனாவிற்கு இடையிலான பொருளாதார சார்புத்தன்மை முக்கியமாது. ஆத்துடன் ஆசியாவை பிளவுபடுத்தும் செயற்பாடுகளை எதிர்க்கின்றோம்.

இந்து பசுபிக் வலயங்கள் தொடர்பிலான ஒரே மண்டலம் மற்றும் பாதை , ஆசியான் போன்ற எதிர்கால திட்டமிடல்களை உருவாக்கக்கூடிய ஆசிய வலயமொன்று அவசியம் ஆகும்.

1955 ஆம் ஆண்டில் பேங்டுன் நகரில் இடம்பெற்ற ஆசிய மற்றும் ஆபிரிக்க மாநாட்டின் தீர்மானத்தின் பிரகாரம் இந்து சமுத்திர வலயம் அமைதி வலயமாக ஐ.நாவினால் பெயரிடப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐஓஆர்ஏ (IORA) தலைவர்கள் மாநாட்டில் மேற்படி முன்மொழிவுகள் மீண்டும் முன்வைக்கப்பட்டிருந்ததோடு, அதன் பிரகாரம் இலங்கை 2018 ஆம் ஆண்டில் நடத்திய 'இந்து சமுத்திரத்தில் - எமது எதிர்காலத்தைக் கூறல்' என்ற மாநாட்டில் கடல்வழிப் பிரயாணங்கள், விமானச் செயற்பாடுகள் மற்றும் கடலுக்கு கீழான கேபிள் திட்டம் ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துக்காட்டப்பட்டது.

இந்து - பசுபிக் வலயத்தின் பல்துறைசார் தொடர்பாடல்களை வலுப்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதோடு, பிரதமர் புமியோ கிஷிடாவின் அமைத்திக்கான கொள்கைகள் மற்றும் சுபீட்சத்திற்கான சட்டதிட்டங்கள் எனும் கொள்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். சுபீட்சத்திற்கான சட்டதிட்டங்களுக்கு அமைய இலங்கையின் பொருளாதார இலகுபடுத்தல் செயற்பாடுகளை சாத்தியமாக்கிக் கொள்ளும் நோக்கில் RCIP உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுத்துள்ளோம்.

சீனாவுடனான நிலையானதும் வலுவானதுமான நல்லுறவை கட்டியெழுப்புவதற்காக ஜி7 பரிந்துரையினை ஏற்றுக்கொள் கின்றோம். ஜப்பானின் ஒத்துழைப்புக்கான பிரவேசத்திற்கு ஆதரவளிக்க தயாராக இருக்கின்ற அதேநேரம் அதற்கு அவசியமாக சூழலை உருவாக்க வேண்டியதும் அவசியமாகும்.

ஜப்பானின் ஒத்தழைப்புக்கான பிரவேசத்திற்கு ஆதரவளிப்பதோடு சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற ஆசியான் நாடுகளுக்கு திறந்தகலந்துரையாடலுக்கான அழைப்பினை விடுத்த அதேநேரம் சுபீட்சமான ஆசிய வலயத்தை உருவாக்குவதற்கு அது முக்கிய காரணமாக அமையும் என்றார்.

## ஏணிப்படி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்யப்பட்டிருந்தது. குறித்த ஏணிப்படியை சீரமைத்தமைக்கான சான்றுகள் இல்லை என அரச சட்டவாதிகளால் நீதிமன்றிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த மூன்று பேரும் விடுவிக்கப்பட்டனர் - என்றார்.

## ஜப்பானிடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கலந்துரையாடினார்.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஜப்பானிய பிரதமரால் சிநேகபூர்வமான வரவேற்பளிக்கப்பட்டது. இருநாடுகளின தும் தலைவர்களது சுமூகமாக கலந்துரையாடலை தொடர்ந்து இருதரப்பு பேச்சுகள் ஆரம்பமாகின.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்காக இலங்கைக்கு ஜப்பான் வழங்கி வரும் ஒத்துழைப்புக்களுக்குப் பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜப்பான் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

அதேபோல் இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இருநாட்டு தலைவர்களும் கலந்துரையாடினர்.

அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜப்பானிய நிதிய மைச்சர் சுனிச்சி சுசுகி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு டோக்கியோ நகரில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மற்றும் சர்வதேசநாணய நிதியத்துடனான திட்டங்கள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சர் யொஷிமாசா ஹயாஷியை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையிலான நீண்டகால இருதரப்பு ஒப்பந்தங்களை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தப் பட்டதோடு, பொருளாதாரம் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல துறைகள் வாயிலாக ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அதேபோல் இலங்கை - ஜப்பான் சங்கத்தினால் டொக்கியோ நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காலை உணவு விருந்துபசாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜப்பானின் முன்னாள் பிரதமர் யசுவோ புகூடா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைப்பதற்காக முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டம் தொடர்பில் ஜப்பானிய முன்னாள் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது விளக்கமளித்தார்.

தற்போது இலங்கைக்குள் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சிறந்த சூழல் உருவாகியுள்ளதென தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கு முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஜப்பானிய முன்னாள் பிரதமர்களுள் ஒருவரான டாரோ அஸோ அவர்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியிருந்ததோடு, இலங்கையுடன் காணப்படும் நெருக்கமான உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வது தொடர்பில் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

அதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க சிங்கப்பூர் பிரதி பிரதமர் லோரன்ஸ் வொன்க்வை டோக்கியோ நகரில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுமென ஜனாதிபதி மீண்டும் உறுதியளித்தார்.

## கஜேந்திரன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸார் செயற்பட்ட விதம் முறையற்றது. இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார் அவர்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் சட்டத்திற்கு முரணான வகையில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள, 15 குடும்பங்களின் உறுதி பத்திரம் உள்ள காணியே இது. இங்கு இராணுவத்தினர் அடிக்கல் வைத்தவேளை அது தொடர்பில் கேட்டபோது அவ்வாறு தனியார் காணியில் விகாரை அமைக்க முடியாது என்று அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர். ஆனால் அங்கே தற்போது விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

மே 23 ஆம் திகதி நாங்கள் அங்கே போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தோம். அதன்போது பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை தாக்கியுள்ளனர். அதற்கான ஆதாரங்கள் உள்ளன. நாடாளுமன்ற வாரம் என்பதனால் அவரைக் கைது செய்வதில் சிக்கல்கள் இருந்தமையினால் அதற்குப் பதிலாக அங்கிருந்த 9 பேரை கைது செய்தனர். அவர்களிடையே சட்டத்தரணி ஒருவரும் இருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சட்டத்திற்கு முரணான வகையில் தாக்கப்பட்டுள்ளார். போராட்டத்தால் அங்கே இடையூறுகள் இடம்பெறுவதாகவே பொலிஸார் கூறியுள்ளனர். அவ்வாறு என்ன இடையூறு நடந்துள்ளது?

சட்டத்திற்கு முரணான வகையில் தனியார் காணியில் பௌத்த விகாரையை நிர்மாணித்துள்ளார்கள். மக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராகப் போராடும்போது, அவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்கள். இந்த நெருக்கடிக்கு காரணம் என்ன? எண்ணிக்கையில் பெரியதாக இருக்கும் சமூகமானது அரச அதிகாரங்களை பயன்படுத்திக்கொண்டு முற்றுமுழு தாக ஏனைய சமூகத்தினருக்குத் தீங்கு ஏற்படுத்துகின்றது. இவ்வாறான நிலைமையில் மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். அவர்களும் தமது


(04ஆம் பக்கம் பார்க்க)




## அராலி - ஆவரம்பிட்டி

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்த்தான

## வருடாந்த மகோற்சவம் - 2023



### பகல் திருவிழா

- கும்ப பூஜை ஆரம்பம் காலை 08.00 மணி
- வசந்த மண்டப பூஜை காலை 11.00 மணி
- பகல் திருவிழா நிறைவு 01.30 மணி



இத் தேவஸ்தானத்தின் கொடியேற்ற உற்சவமானது ஏனைய ஆலயங்கள் போலன்றி ஆகம கிரியைகளுக்கு அப்பாற்பட்டு அவ்வாலயத்திற்கே உரிய பாரம்பரிய பக்திமார்க்க கிரியை முறைப்படி நடைபெறும்.

திருவிழா வருடாவருடம் வைகாசி மாதத்தில் வரும் விசாகம் நட்சத்திரத்திற்கு முதல் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி பின் அடுத்த 2ம் சனிக்கிழமை (9 திருவிழாக்கள்) முடிவடையும்.

கொடியேற்ற தினத்தன்று மூலமூர்த்தி (சக்திபீடத்தில் அம்பாளுக்கு அபிசேக பூசைகள் நடைபெற்று, கொலு வைக்கப்பட்டிருக்கும் அம்பாளின் கொடிச்சீலைகள் பூஜிக்கப்பெற்று அம்பாளிற்கும், சிவாச்சாரியாருக்கும் காப்பு கட்டப்பட்டு கொடிச்சீலைகள் தாங்கிய தாம்பாழத்தை சிவாச்சாரியார் வீதி வலம் கொண்டுவந்து ஆலய வெளிவீதியில் தென்கிழக்கு மூலையில் திருத்தளம் என்னும் இடத்தில் கமுக மரத்தில் நடுவில் அம்பாளின் வாகனமாகிய சிங்க கொடியும் (வெள்ளை), கிழக்கே மஞ்சள், தெற்கே கறுப்பு, மேற்கே சிவப்பு, வடக்கே பச்சையும் ஆகிய வர்ணக் கொடிகளுடன் கொடிஸ்தம்பம் நிறுத்தப்படும்.

இப்பஞ்ச கொடிகளில் தத்துவ ரீதியாக படைத்தல், காத்தல், அருளல், மறைதல், அழித்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்கயையும், ஐம்புலன்களையும், ஐம்பொறி களையும் குறிப்பதாக ஐதீகம்.

தினமும் அம்பாள் காலை, மாலை வெளிவீதி வலம் வருகின்ற பொழுது கொடிஸ்தம்ப பூஜை நடைபெறும்.
ஒன்பதாம் திழுவிழா அன்று பெரும் பொங்கலுடன் கொடி இறக்க நிகழ்வு நிறைவுபெற்று மகோற்சவம் பூர்த்தியாகும்.

அராலி ஆவாரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகும் நன்னாளில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து அம்பாளை தரிசிக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளினுடைய திருவருள் கிடைக்கப்பெற்று அனைவரது வாழ்விலும் சுபீட்சம் மேலோங்க அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.



ஆலயத்தலைவர்
செந்தில்நாதன் மயூரேசன்

அராலி ஆவாரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்தித்து அம்பிகையினுடைய சோபகிருது வருட மகோற்சவம் இன்றைய நன்னாளில் ஆரம்பமாகிறது. இன்றிலிருந்து ஒன்பது நாட்களுக்கு அம்பாளின் உற்சவ நிகழ்வுகளில் கலந்து திருவருளைப்பெற்று பேரானந்த பெருவாழ்வை வாழ்வீராக!



தேவஸ்த்தான பிரதம குரு
"வேதசாஸ்திர ஞான நிபுண"
சிவஸ்ரீ. தியாகராஜ சர்வேஸ்வரக்குருக்கள்

விளம்பர அனுசரணை
கிரி வீடியோ
KIR VIDEO

புலம்பெயர் முதல் "ஆன்மீக பேரொளி"
உலகக்கோவில் worldkovil .com நிறுவனர்
"ஆன்மீகச்செல்வர்" சின்னத்துரை இராஜகருணா.
இராஜ. இலக்கியன்



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மகாவலி அதிகார சபையின் புதிய வலயத்திற்கு எதிர்ப்பு

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மகாவலி அதிகார சபையின்கீழ் இதுவரையில் கொடுக்கப்பட்ட காணித் துண்டுகளில் ஒன்றுகூட தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார். அரசின் அபிவிருத்தித் திட்டம் ஒன்றில், இந்த நாட்டில் உள்ள ஒரேயொரு இனத்தைத் தவிர மற்றைய இனங்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டிருப்பது இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைக்கு நிகரான ஓர் செயல். தனது குடிமக்கள் அனைவரையும் சமமாக நடத்தவேண்டியது அரசுகளின் கடமை. அப்படியிருக்கும்போது தமிழ், முஸ்லிம், பறங்கி மக்களை அபிவிருத்தியிலிருந்து ஒதுக்கி வைத்திருப்பது ஏற்புடையதல்ல.

அப்படிப்பட்ட நிலையில்தான் மகாவலி அதிகார சபை வடக்கில் முதலில் 'எல்' வலயத்தையும் தற்போது 'ஜே' வலயத்தையும் உருவாக்க முனைகின்றது. எல் வலயத்திற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே விடுக்கப்பட்டு, அதில் தமிழர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த காணிகளை அபகரித்து அவை சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் வகையில் இந்த எல் வலயம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளை உள்ளடக்கி புதிதாக மகாவலி 'ஜே' வலயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள அம்பாள் புரம், கரும்புள்ளியான், கொள்ளிவிலாங்குளம், கொம்பு முறிப்பு, நெட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசம் குளம், செல்வபுரம், சிராட்டிக்குளம், சிவபுரம், வன்னிவிலாங்குளம், விநாயகபுரம், ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும், அதேபோல் அனிச்சங்குளம், பாரதிநகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம் மத்தி,யோகபுரம் கிழக்கு ஆகிய 07 கிராம அலுவலர் பிரிவுகளையும், மாந்தை மேற்கில் உள்ள பாலியாறு, அந்தோனியார்புரம், ஆத்திமோட்டை, இலுப்பக்கடவை, கள்ளியடி, கூறாய், கோயிற்குளம், காயாநகர்,பெரியமடு ஈஸ்ட்,பெரியமடு வெஸ்ட்,பல்லமடு,வெடுத்தல்மடு ஈஸ்ட், நோர்த், உள்ளடங்களாக 15 கிராம சேகவர் பிரிவுகளையும் இணைத்து 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒன்றிணைந்து மகாவலி 'ஜே' வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவை அனைத்தும் முற்றிலும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகள். இந்தப் பகுதிகளில் மகாவலி திட்டம் செயற்பாட்டில் இல்லை, இந்தப் பகுதிகளிற்கு மாகாவலி தண்ணீரைக் கொண்டுவரவும் முடியாது என்று தெரிவிக்கப்படும் நிலை யில் எதற்காக இந்தப் பகுதிகளில் மகாவலி அதிகார சபை உள்நுழைகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவருமான கந்தையா பிரேமச்சந்திரன் (சுரேஸ்) அண்மையில் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். அவரது கேள்வி நியாயமானது. ஏற்கனவே 'எல்' வலயத்திற்குக்கூட மகாவலி தண்ணீர் வராத நிலையில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றியதைத் தவிர இந்த அதிகார சபை செய்தது ஒன்றுமில்லை எனும்போது 'ஜே' வலயமும் அதேபோன்று சிங்களக் குடியேற்றத்துக்கான முன்னேற்பாடுதான் என்று தமிழர்கள் அச்சப்படுவது சரியானதுதானே!

நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இது குறித்துத் தெரிவத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், சிங்களவரின் பரம்பலை வடக்கில் விரிவுப்படுத்தும் செயற்பாடுகளில் மகாவலி அதிகார சபை ஈடுபடுகின்றது. இவற்றை மகாவலி அதிகார சபை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார்.

கடந்த 40 ஆண்டுகளில் மகாவலி அதிகார சபையின் கீழ் தமிழர்களுக்கு ஒரு காணித் துண்டாவது கொடுக்கப்படாத நிலையில், இனியும் அது வழங்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே அதனை எதிர்ப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை.

## தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவுடன் சிறீதரன் எம்.பி. ஆய்வு

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் சமகால நிலை தொடர்பிலான கலந்துரையாடல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதானிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையில் புதன்கிழமை நண்பகல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்த விவரண அறிக்கையொன்றை கடந்த மே 9ஆம் திகதி சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

அதனையடுத்து, அவர் அந்த அறிக்கையின் பிரதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் தூதுவர்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகளுக்கு தனித்தனியே அனுப்பினார்.

இந்நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே ஆணைக்குழுவின் பிரதானிகளால் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது தனியாருக்கோ, மத நிறுவனங்களுக்கோ சொந்தமான காணிகளில் இடம்பெறும் ஆக்கிரமிப்புகள் மற்றும் அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பில் உரிய தரப்பினர் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கின்றபோது, பொலிஸ் முறைப்பாடு செய்தல், வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தல் உள்ளிட்ட வழிமுறைகளையும் கையாளும் பட்சத்தில், இந்த விடயங்கள் தொடர்பில் தமது நிறுவனம் சார்ந்து மேல்மட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரும் நீதிபதியுமான ரோகினி மாரசிங்க சுட்டிக்காட்டினார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார். (05)

## வை.எல்.எஸ்.ஹமீட்டின் மறைவு கவலை தருகிறது

### ரிஷாட் பதியுதீன் அனுதாபம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீட்டின் மறைவு மிகவும் கவலையளிக்கிறது என்றும், அவரின் மறைவுச்செய்தி உலகின் நிலையாமையை ஒரு கணப்பொழுதில் உணர்த்தியுள்ளது என்றும் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சட்டத்துறையில் மாத்திரமன்றி அரசியலிலும் ஆழ்ந்த அறிவு, அனுபவம் உடையவர் வை.எல்.எஸ்.ஹமீட். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூலகர்த்தாக்களில் ஒருவரான இவரிடம் இருந்தவை எல்லாம் திறமைகள்தான். தனது நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தை நிரூபிக்கும் பாங்கே ஒரு சாமர்த்தியமானது.

சிறிதுகாலம் முரண்பட்டிருந்த அவர், காலச்சூழற்சியில் நம்பிக்கை வைத்திருந்தார். சட்டத்தின் பல பரிமாணங்களையும் கற்றுத்தேர்ந்த விவேகி வை.எல்.எஸ்.ஹமீட். ஆனாலும், அடக்கம், அமைதியே அவரது ஆளுமையானது. முஸ்லிம் அரசியலின் வளைவு, நெளிவுகளை நிமிர்த்திச் செல்லுமளவுக்கு அவரிடம் தீட்சண்யமிருந்தது.

மரணத்தின் வாயிலை எந்தச் சக்தியாலும் அடைக்க முடியாது என்பதே எமது நம்பிக்கை. இந்த நம்பிக்கைதான் எங்களை நிதானப்படுத்துகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது கழாகத்ரைப் பொருந்திக்கொள்ளும் ஈமானை அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தந்தருள்வானாக..!

அல்லாஹ் அன்னாரை பொருத்திக்கொண்டு, அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா எனும் உயர்மிகு சுவன பாக்கியத்தை வழங்குவானாக என்று குறிப்பிட்டுள்ளார். (05)

## நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமாக டிக்கிரி கே. ஜயதிலக



புதிய பதவியணித் தலைமை அதிகாரியும், நாடாளுமன்ற பிரதிச்செயலாளர் நாயகம் பதவிக்கு நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகமாகப் பணியாற்றிய டிக்கிரி.கே ஜயதிலக 23 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார் என பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்

2002 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த டிக்கிரி கே.ஜயதிலக, அரச சட்டத்தரணியாக மஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்கள் பலவற்றில் வழக்குகளுக்காக ஆஜராகியுள்ளார்.

2006ஆம் ஆண்டு நீதிமன்ற சேவையில் இணைந்த அவர் மஜிஸ்திரேட் நீதிபதியாக, மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக நாட்டின் பல்வேறு பகுதி களில் உள்ள நீதிமன்றங்களில் சேவையாற்றியுள்ளார்.

2015ஆம் ஆண்டு உதவிச் செயலாளர் நாயகமாக இலங்கை நாடாளுமன்றத்தில் சேவையில் இணைந்து கொண்ட இவர், சட்டவாக்க சேவைகள் தொடர்பான உதவிச் செயலாளர் நாயகமாகப் பணியாற்றினார்.

டி.கே.ஜயதிலக கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணிக் கல்வியைப் பெற்றிருப்பதுடன், இங்கிலாந்தின் நொத்தம்பிரியா பல்கலைக்கழகத்தில் சட்ட முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். சமூகம்சார் சீர்திருத்தம் தொடர்பில் வெளியீடுகளையும் அவர் வெளியிட்டுள்ளார். (05)

## வடக்கு - கிழக்கு மீனவர்களுக்கு விரைவில் சீனா மண்ணெண்ணெய்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



சீன அரசாங்கத்தால் கடற்தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெய் விரைவில் வடக்கு கிழக்கில் உள்ள ஏழு கடற்றொழில் மாவட்டங்களுக்கும் வழங்கப்படும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைமுழுவதுமான கடற்தொழில்அமைச்சர்என்ற வகையில் மீனவ மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிவேன். மீனவ மக்களின் வாழ்வாதாரம் அன்றாட தொழில் நடவடிக்கை, வீட்டு வசதிகள் என்பவற்றை மேம்படுத்தும் முகமாக சீன அரசாங்கம் சுமார் 1500 மில்லியன் ரூபாக்களுக்கான செயற் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

அதன் ஆரம்ப நடவடிக்கையாக இலங்கையில் உள்ள 15 கடற்தொழில் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 27 ஆயிரம் படகு உரிமையாளர்களுக்கு, ஒருவருக்கு 150 லீட்டர் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படுவதோடு இரண்டாம் கட்டமாக எஞ்சியவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன.

வட மாகாணத்தில் உள்ள நான்கு கடற் தொழில் மாவட்டங்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று கடற்தொழில் மாவட்டங்களுக்கும் விரைவில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சீன அரசாங்கத்தின் உதவி திட்டத்தின் கீழ் கடற்தொழிலாளர்களுக்கான வீடு மற்றும் கடற்தொழிலாளர்களுக்கான வலைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அது மட்டுமல்லாது எரிபொருள் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு பற்றியில் இயங்கக்கூடிய படகை சம்பிரதாயபூர்வமாக கடலில் இறக்கியுள்ளோம்.

எரிபொருளிலும் பார்க்க பற்றியில் இயங்குப் படகு இலாபகரமானதாகவும் சூழலுக்கு மாசு இல்லாத தொழில்நுட்பமாக கருதும் நிலையில் அதனை இலங்கையில் விரிவுபடுத்துவதற்கான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆகவேஜப்பான் அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய அரசாங்கமும் கடற் தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ள நிலையில் விரைவில் அதற்குரிய செயல்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

## கடற்றொழிலை சர்வதேச நியமங்களுக்கு ஒழுங்குபடுத்துவது தொடர்பில் ஆராய்வு

### ஐரோப்பிய ஒன்றியத் தூதுவருடன் டக்ளஸ் சந்திப்பு



சர்வதேசகடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை கடற்றொழிலாளர்கள் மற்றும் ஆழ்கடல் படகுகளின் செயற்பாடுகள் மீன்பிடி தொடர்பான சர்வதேச நடைமுறைகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபிஷீக்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையேயான சந்திப்பு கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளில், வி.எம்.எஸ். எனப்படும் படகுகளை கண்காணிக்கும் கருவி பொறுத்தப்பட்டிருப்பதன் அவசியத்தையும், அதன் பராமரிப்பு மற்றும் சேவைகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடினர்.

அத்துடன் மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி கடலில் நடைபெறும் அத்துமீறல்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் என்பவற்றைக் கண்காணிப்பது மற்றும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின்போது கடற்றொழில் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (05)

## கஜேந்திரன் ....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சு)

பிரதிபலிப்பைக் காட்டுவார்கள். நெருக்கடி நிலைமைக்கு இதுவே காரணம்.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களின் உரிமைகளை அழிக்கிறது. கடந்த 75 வருடங்களாக செய்த தவறுகளை மீண்டும் செய்ய மாட்டோம் என்று கூறினாலும்,தொடர்ந்தும் அதனையே செய்கின்றீர்கள். அதற்கான காரணம் நீங்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் இவ்வாறு நடந்தால் நாடு முன்னேற்றமடையாது. இன்னும் எத்தனை வருடங்கள் போனாலும் நடக்காது. நாடு இதே நிலையிலேயே இருக்கும்.

இதேவேளை குறித்த விடயத்தில் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில் சபாநாயகர் தேவையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

சந்தைப்படுத்தல் துறையில் வேலை தேடுபவரா நீங்கள்?

குறித்த துறையில் ஒரு வருட கால அனுபவமிருந்தால் விண்ணப்பிக்கலாம்

ஹேலிஸ் குழுமத்தைச் சேர்ந்த சோலார் பேனல்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் எமது நிறுவனத்திற்கு

வடமாகாணத்துக்கான

விற்பனைப் பிரதிநிதிகள்

இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

சிறந்த சலுகைகளுடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பத்தை இன்றே Whatsapp செய்யுங்கள்

076 412 98 30

s.ratheeshwaran@hayleyssolar.com

# மோட்டார் சைக்கிளில் கசிப்புடன் கல்முனையில் ஒருவர் கைதானார்

மோட்டார் சைக்கிளில் கசிப்பு கடத்தி சென்ற இளைஞனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறைமாவட்டம்கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது நேற்று வியாழக்கிழமை) மோட்டார் சைக்கிளில் சூட்சுமமாக எடுத்து செல்லப்பட்ட கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது பெரிய நீலாவணை பகுதியை சேர்ந்த 19 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சிவப்பு நிற ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் உட்பட கடத்தி செல்லப்பட்ட 20 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் பிரதான வீதியில் உள்ள பெரிய கல்லாறு பகுதியில் அமைந்துள்ள விசேட சோதனை சாவடியில் வைத்து கைதானார்.

மேலும் கைதான சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள்கள் யாவும் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்க விசேட அதிரடிப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

## பொலீஸ் உத்தியோகத்தர்மீது பேலியகொடவில் தாக்குதல்!

### பெண் உட்பட மூவர் கைது

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கி அவரது கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பெண் உட்பட மூவரை களனி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பேலியகொடை ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பாலத்துக்கு அருகில் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தலைக்கவசம் அணியாமல் சென்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநரை நிறுத்தி சோதனையிடச் சென்றபோது, மற்றுமொரு பெண் அந்த இடத்துக்கு வந்து பொலிஸ் உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சந்தேக நபர்கள் புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர்கள் 20,22 மற்றும் 51 வயதுடைய களனி, பட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். களனி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## சகோதரியின் திருமணத்துக்கு சென்ற 15 வயது மாணவன் விபத்தில் சாவு!

### இங்கிரியவில் சம்பவம்

தனது சகோதரியின் திருமண வைபவத்துக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 15 வயது மாணவன் ஒருவன் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் என இங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹந்தபாங்கொட கொட்டிகல பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை ஒன்றில் பத்தாம் தரத்தில் கல்விகற்கும் மாணவ தலைவராகவிருந்த பிம்சர பிரபோத் ரணசிங்க என்ற மாணவனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் பலா மரத்தில் மோதி நின்றதாக இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த பெண் ஒருவர் தெரிவித்தார்.

விபத்தில் படுகாயமடைந்த மாணவனும் மற்றைய நபரும் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மாணவன் உயிரிழந்துள்ளதுடன் மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

## கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் 10 கண் வில்லைகளை திருடிய உதவியாளர் கைது!

கொழும்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் சத்திர சிகிச்சைஅறையிலிருந்த10கண் வில்லைகளைத் (கென்டாக்ட் லென்ஸ்கள்) திருடிய சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை அறை உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கொம்பனி வீதி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் திருடியதாகக் கூறப்படும் கண் வில்லைகளின் பெறுமதி 369,000 ரூபா என பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தனியார் வைத்தியசாலையின் கடமைப் பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுசந்தேகநபர்கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தெஹிவளை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனித் தெரு பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு மேற்கொண்டு வருகிறது. (05)

ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்

Palma மின்கலங்கள்

IT Power Backupக்காக

dsl We lead the way...!

PALMA



7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து

மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக
6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து

மின் மோட்டார் சைக்கிள்களுக்கான
12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து

Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

077 307 8799
070 163 0209


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# ஒழுக்கம் உயர்வளிக்கும்



ர.பூமிகா
யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என 'வள்ளுவர்' கூறினார். ஒழுக்கமே ஒரு மனிதனை உயர்வடையச் செய்யும். என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒழுக்கமின்றி நாம் இந்த சமுதாயத்தில் நல்ல பிரஜையாக வாழ முடியாது. பசு பால் தரும் மரம் கனி தரும் என்பது போல ஒழுக்கம் விழுப்பம் தரும். ஒழுக்கம் என்பது மேலான பண்புகளை குறிக்கின்றது. ஒழுக்கம் என்பது இக்கால மக்களுக்கு மிகவும் இழிவானதாக காணப்படுகின்றது. நம் முன்னோர்கள் ஒழுக்கத்தைப் பற்றி மிகவும் அழகான கவிதைகள், கட்டுரைகள், திருக் குறள்கள் மனதைக் கவரும் வண்ணம் ஒழுக்கத்தை சிறப்பித்து எழுதப்பட்டுள்ளது.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' அதே போன்று ஒழுக்கம் சிறுவயதில் நாம் கடைப்பிடித்தால் தான் பெரியோர்களாயினும் நாம் நல்ல மனிதனாக வாழ முடியும். இக்காலகட்டத்தில் போதைவஸ்து பாவனை, மதுபானம் அருந்துதல், துஷ்பிரயோககங்கள் பலவற்றில் ஈடுபட்டு நம் மனிதர்கள் ஒழுக்க நெறி தவறி காணப்படுகிறார்கள். ஒழுக்கத்தை கடைக்கிடிக்க வேண்டும் நமது சமய பாடங்களிலும் ஒழுக்கத்தின் சிறப்பு பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது. ஆனால் அவற்றை நாம் பின்பற்றுவதில்லை. பெரியோர்களை மதித்தல், ஆசிரியர்களை மதித்தல், நம் முன்னோர்கள் சொல்லும் சொற்பொழிவுகளை கேட்டல் பல விடயங்களானவற்றை நாம் மதித்தல் ஒழுக்கமாகும். ஒழுக்கமே ஒரு மனிதனை மேம்படையச் செய்யும். மகாத்மாகாந்தி இந்தியாவின் சுதந்திரத்திற்காக போராடினார் சத்திய வழியில் சென்றார். அவர் ஒழுக்கத்தையும், நேர்மையையும் கடைப்பிடித்த தியாகியாவார்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' சிறுவயதில் நாம் பழகும் பழக்கம் நாம் நாம் சாகும் வரை நீடிக்கும். நல்லவன் என்ற பெயரை கேட்க பல மாதங்களோ/பல வருடங்களோ ஆகலாம். ஆனால் கெட்டவன் என கேட்பதற்கு ஒரு நிமிடம் போதும். நாம் இந்த சமுதாயத்தில் ஒழுக்கமுள்ளவனாக வாழ்வது மிகவும் கடினமான ஒரு விடயம்.நாம் இந்த உலகத்தில் நல்லவனாக வாழ வேண்டுமென்றால் நாம் ஒழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும். போதைக்க அடிமையாகி நம் மனிதர்கள் மிகவும் இழிவானவராக காணப்படுகின்றனர். நாம் பழகும் நண்பர்கள் ஒழுக்கத்துடன் இருக்கின்றார்களா என அறிந்து நாம் அவர்களுடன் பழகுதல் வேண்டும்.

'ஒழுக்கத்தால் காதல் வரலாம் அனால் காதலால் ஒழுக்கத்திற்கு சாதல் வரக்கூடாது' ஒழுக்கம் என்பது வெறும் ஐந்தெழுத்து ஆனால் நம் தலையெழுத்தை மாற்றும் எழுத்து. இவ்வுலகில் எவ்வளவோ நல்லவற்றைக் காண்கிறோம். ஆனால் அவற்றையெல்லாம் விட்டு விட்டு தீயவற்றை நாடுகின்றோம். தீயவற்றை நாடுவதால் நம் சமூகத்தில் வாழும் பிரஜைகள் ஒழுக்கமின்றி காணப்படுகின்றார்கள். வெளிநாடுகளில் ஆரம்பித்த குடிப்பழக்கம் இப்பொழுது நம் நாட்டில் காணப்படுகின்றது. இதன் மூலம் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் போன்றவற்றை வெளியிட்டு நம் இளைஞர்கள் அதனை அருந்தி ஒழுக்கமின்றி இந்த சமூகத்தில் காணப்படுகின்றார்கள்.

கல்வி மட்டும் ஒரு மனிதனை உயர்த்துவதல்ல ஒழுக்கமும் அவனை உயர்வடையச் செய்யும். அழகில்லை என்றாலும் அவனிடம் நற்பண்புகள் இருக்கிறது அது அவனை அழகாக்கும். 'இந்த சரீரம் கிடைத்தது பெருட்டோயம்' என்று ஆறுமுக நாவலர் கூறினார் . இந்த உலகில் வாழ்வதற்கு நாம் ஒழுக்கமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். ஒழுக்கம் என்பதை நீ ஒரு இலக்காக நினை. வாழ்வில் நீ முன்னேறலாம். இந்த சைவ வாழ்வு ஒழுக்க நெறிப்பட்டது.

ஒழுக்கம் என்பதை நாம் தொட்டுணர முடியாது. உருவமில்லை அதனை நாம் நம்முடைய மனதினால் மட்டுமே உணரமுடியும். நாம் ஒழுக்கமுள்ளவனாக வாழ்ந்தால் நாம் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அதற்கு பயந்து நாம் ஒழுக்கத்தை மீற முடியாது. நாம் வாழும் வாழ்க்கையை ஒழுக்கத்துடன் நற்பண்புகளைக் கொண்டு வாழ்தல் வேண்டும். ஒழுக்கம் உயர்வு தரும். உன் வாழ்க்கையில் வாழ்வு தரும். ஒழுக்கத்தை கொண்டு வாழ்ந்தால் கனவில் எண்ணியபடியே உன் வாழ்க்கை. ஒழுக்கத்தை நீ கடைப்பிடித்தால் மட்டுமே கனவில் எண்ணிய உன் வாழ்க்கையை வாழ முடியும். ஒழுக்கமில்லையேல் வாழ்வு சாத்தியமில்லை. வாழ்வு சாத்தியமில்லையேல் அந்த உலகத்தில் நீ இருக்க முடியாது. சிவனின் சமய கதையினூடாகவே தாழம்பூ பொய் சொன்னதால் தான் எந்த கோயிலிலும் தாழம்பூ வைக்கக்கூடாது என்று சிவன் கூறினார். தாழம்பூ மட்டும் பொய் சொல்லாமல் ஒழுக்கம் தவறாமல் இருந்திருந்தால் நாம் கோயிலுக்கு தாழம்பூ வைத்திருக்கலாம். இக்கதையினூடாக நாம் பொய் சொல்லக்கூடாது என்பதையும், ஒழுக்கம் தவறக்கூடாது என்பதையும் அறிந்திருக்க முடிகிறது.

ஒழுக்கம் தவறக்கூடாது ஒழுக்கமுள்ளவராக வாழ்தல் வேண்டுமென்பதை பல கதையினூடாகவும் திருக்குறள்களினூடாகவும் நாம் அறிந்து கொள்ள கூடியதுமாக இருந்தாலும் நாம் ஒழுக்கத்தை கடைப்பிடிக்காமலே வாழ்கின்றோம். ஒழக்கமாக வாழ வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் நாம் ஒழுக்கமானவனாகவும், நல்லவனாகவும் இவ்வுலகில் வாழ வேண்டும் என்பதையும் நாம் உணர வேண்டும். ஆசிரியர் சொல்கின்ற நல்ல பழக்கவழக்கம் போன்ற நன்மையான பல விடயங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

பலவகையான மதுபானம் பல பெயர்களுடன் அழகான போத்தல்களுடன் அழகான கவர்ச்சிகரமான விடயங்கள் இருக்கின்றது. ஆனால் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறவில்லை. நம் அரசாங்கம் தேவையில்லா விடயங்களை கருத்தில் கொள்ளுகின்ற பல மனிதர்கள் ஒழுக்கமுள்ளவனாகவும் இருந்து இந்த சமுதாயத்தில் அவனால் வாழ முடியவில்லை. அவனை கெட்டவனாக வீழ்த்துகின்ற நம் அரசாங்கம். பிறந்தது முதல் பதினெட்டு வயது வரையான பிள்ளைகள் அனைவருமே சிறுவர்கள் தான். ஆனால் இக்கால கட்டத்தில் அப் பேச்சுக்கு இடமேயில்லை. காரணம் நல்லவனையும் கெட்டவனாக தள்ளுகின்ற நம் அரசாங்கம். ஒழுக்கமுள்ளவனாக வாழ்வது கடினமாகவே இருந்தாலும் பல சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் இருந்தாலும் நாம் ஒழுக்கத்தை தவறக்கூடாது. ஒழுக்கமானவனாக இந்த உலகத்தில் வாழ்வதற்கு எவ்வளவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை கெட்டவனாக இருக்கிற இளைஞர் சமுதாயம் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டும். இவ்வளவு நேரமும் பொறுமையுடன் வாசித்த முதல்வர்களுக்கு மிகவும் நன்றி. நாம் ஒழுக்கமுள்ளவனாக வாழ வேண்டும் வாழ்வோம் என சத்தியபிரமாணம் எடுக்கிறோம். ஒழுக்கம் உயர்வளிக்கும்.

# அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

உயிர்களிடத்து அன்பு செலுத்துதல்இ உயரிய மனிதப் பண்பு.

என்றும் அது மகிழ்ச்சியையும்இமேன்மையையும் தரும்.

அன்புடையவர்களையும்இஅன்பாக கருமமாற்று பவர்களையும் எல்லா உயிர்களும் போற்றி மகிழும்.

அவர்கள் தியாகிகளாக இ மகாத்மாக்களாக மதிக்கப் பெறுவார்.

அவர்கள் வாழ்வு தமக்காக இல்லாமல் பிறர்க்காக அமைந்து மகிழ்ச்சி பெறும்.

அதனாலேதான் வள்ளுவரும் –

அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் –அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

– என்றும் கூறிச் சென்றார்.

அன்பு என்பதை கண்ணால் காண முடியாது.அது ஆத்மார்த்தமாக உணர்வுடன் தொடர்பு கொண்டது. மேலும் அதனை நடத்தைகள் மூலமே உணர்ந்து கொள்ள முடியும்.

அன்பு என்பதில் மனித நேயம், இரக்கம், பாசம்,கருணை, ஆகியவற்றைக் கொண்ட மனித நல்லொழுக்கங்கள் பொதிந்து இருக்கும்.இவற்றை மனித நடத்தைகள் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த அன்பின் பெரும் சிறப்பு யாதெனில் அது அன்பை செலுத்துபவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்இஅன்பைப் பெறுபவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.இவ்வாறு இருவழி மகிழ்ச்சி அளிக்க வல்லது அன்பு.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பாகக் கதையுங்கள் அது உங்களை அழகாக்கும். அன்பாகக் கதையுங்கள் பகை தோன்றாது. அன்பாகக் கதையுங்கள் அது உங்களுக்கு சமூக பலத்தைத் அளிக்கும்.

அன்பாகக் கதைப்பதாலும் பழகுவதாலும் அது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நிரந்தரமான இன்பமே தந்து நிற்கும்.அன்பு செலுத்த எதுவுமே தேவையில்லை அதனிக் கொடுக்கக் கொடுக்க வற்றாத ஜீவ நதியாக வளர்ந்து கொண்டே இருக்கும். மேலும் மேலும் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்து நிற்கும். உள்ளம் தூய்மை பெறும்.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பினால் தீய குணங்களான கோபம், பொறாமை, அகந்தை, தேவையற்ற உள அழற்சி போன்றவை அழிக்கப்பட்டு நற்குனங்களான பாசம், பரிவு, உண்மை, நேர்மை,கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு போன்றன வளர்க்கப்படும்.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பு இன,மொழி,சாதி,சமய வேறுபாடுகள், பொருளாதார ஏற்ற தாழ்வுகள் அறியாது.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!! எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் நிறம் என்று நியாய வாழ்வுக்கு இட்டுச் சென்று மேலான வாழ்வினைத் தந்து நிற்கும்.

ஆதலால் அன்பு செலுத்துவோம்! அன்பு செலுத்துவோம்!!

அன்பு கிடைப்பது வரம்! அன்பு செலுத்துவது புண்ணியம்!!



வேஷமில்லாத உண்மையான அன்பு எவரையும் ஏமாற்றாது. அமைதி நிறைந்த மேன்மை வாழ்வுக்கு மதிப்பற்ற உயர்ந்த ஔடதமாகவும் அது அமையும்.

ஆதலால் எமது வாழ்வை அன்பு வாழ்க்கை நெறியாகக் கொண்டு அன்புடன் வாழ்வோம். மகிழ்ச்சி பெறுவோம்.

- தாமரை நாயகன் -

காலைக்கதிர் Kalaikkathir

# நினைவு சின்னமும் அரசியலா?



என்.சத்தியமூர்த்தி

## அக்கரை இக்கறை அலசல்

நாட்டில் பலவேறு கலகங்கள் மற்றும் கலவரங்களில் உயிர் இழுந்தவர்களுக்கு புனித அஞ்சலி செய்யும் விதமாக தலைநகர் கொழும்பில் ஒரு நினைவு சின்னம் அமைக்க வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அந்த நினைவு சின்னம் கொழும்பில் எந்த இடத்தில், எந்த விதத்தில் எழுப்பப்படும் என்பது இன்னமும் முடிவாகவில்லை.

இந்த முயற்சி, மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக இருக்கும் போது அன்றைய பிரதமர் ரணில் ஆட்சி காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டது என்று கூறலாம். கடந்த 2018 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் நிறைவேற்றிய இழப்பீட்டிற்கான சட்டத்தில், இதுபோன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடு சுதந்திரம் அடைந்து காலம் துவங்கி, அனைத்து போராட்டங்கள், கலவரங்கள், தீவிரவாத செயல்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் செயற்பாடுகள் ஆகியவற்றில் உயிர் இழுந்தவர்களுக்காக நாடே இன அவர்களை நினைத்து தொடர்ந்து கண்ணீர் விடுகிறது என்று சாரப்படும்படியான நினைவு சின்னம் அமைக்கப்பதே எண்ணம். அந்த எண்ணம் எவ்வாறு செயபடுத்தப்படுகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஒரு விதத்தில், அரசின் நினைவு சின்னம் இனப்போரில் உயிரிழுந்த அனைத்து அப்பாவி தமிழ் மக்களையும் கூட நினைவு கூர்வதே. ஆனால், அத்துடன், பல்வேறு காலகட்டத்தில், நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த இராணுவத்தினருக்கும் சோந்தே அந்த நினைவு சின்னம் அமைக்கப்படுகிறது என்று அரசு அறிவித்துள்ளது.

இது தமிழர் தரப்பால் ஏற்றுக் கொள்ளப்படுமா என்பது தெரியவில்லை. ஆனால், இதனை வைத்து அரசு தரப்பினர் அரசியல் செய்கிறதோ இல்லையோ, தமிழ் அரசியல் தலைமைகள் பிரச்சினையை கிளப்பும் என்று எதிர்பார்க்கலாம்.

மானும் சிங்கமும் ஒரே ஓடையில் எவ்வாறு நீர் குடிக்க முடியும் என்பது அவர்களது வாதமாக இருக்கும். ஆனால், அது மான் அல்ல, புலி என்று அரசு சொல்லாமல் சொல்கிறது. அது எப்படி என்றாலும், சர்வதேச அரங்கில் போர் குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை இராணுவத்திற்கு எவ்வாறு ஒரு நினைவு சின்னம் எழுப்புவதற்காயிற்று, என் தமிழ் தரப்பினர் கேள்வி எழுப்பினால் அதற்கு அரசிடம் விடை இருக்காது. இந்த விடயத்தில், தென்னிலங்கை அறிவுஜீவிகளும் தமிழர்களை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

### நடந்தவை, நடப்பவை

ஆனால், அரசு தரப்போ, நடந்தவை அனைத்தும் நடந்தவையாகவே இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற சித்தாந்த ரீதியாக ஒருமுன்னெடுப்பைசெய்துபார்க்கமுயல்கிறது. இந்த முயற்சி, பிள்ளையார் பிடிக்க, குரங்காய் போன கதையாய் முடியலாம் என்றே தோன்றுகிறது.

நினைவுசின்னம்விடயத்தில், தமிழர் தரப்பு மட்டுமல்ல. தென்னிலங்கையில் ஜேவிபியும் கருத்து சொல்லும் வாய்ப்பு இருக்கிறது. அவர்களை பொறுத்த வரையில் கடந்த எழுபதுகளின் முதல் இரண்டு ஆண்டுகளிலும், எண்பதுகளின் கடைசி இரண்டு ஆண்டுகளிலும் அவர்கள் முன்னெடுத்த இரண்டு ஆயுத போராட்டங்களையும், அரசு இராணுவ ரீதியாக அடக்கியதை இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. மன்னிக்கவில்லை.

அன்றைய கணக்குப்படி, ஜேவிபியின் இரண்டாவது ஆயுத போராட்ட காலத்தில் சுமார் அறுபதாயிரத்திற்கும் குறையாமல், இருபாலையும் சேர்ந்த சிங்கள இளைஞர்கள், இராணுவத்தினரால் அழித்து ஒழிக்கப்பட்டனர். இது போன்றேதமிழர்தரப்பிலும்இனப்போரில், அதிலும் இறுதிப்போரில் நாற்பதாயிரத்திற்கும் குறையாத அப்பாவிகள் காவு கொடுக்கப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கு கூறுகிறது. அதனையேஒருலட்சத்துஎழுபத்தாறாயிரம் என்று அன்றைய மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் அமைத்த குழு விசாரித்து அறிக்கை சமர்ப்பித்தது.

ஆனால், இனப்போரில் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்படவே இல்லை என்று அன்று இராணுவ செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்தார். பல்வேறு அழுத்தங்களுக்கு இடையே, போர் காலத்தில் அரசோடு இணைந்திருந்த சிங்கள – பௌத்த புத்திஜீவி ராஜீவ விஜயசிங்கே, சுமார் ஐயாயிரம் அப்பாவி தமிழர்கள் இறந்திருக்கலாம் என்று ஒரு தொலைகாட்சி நிகழச்சியில் அப்போதே குறிப்பிட்டார்.

இனப்போர் ஆகட்டும் அல்லது ஜேவிபியின் ஆயுத கிளர்ச்சிகள் ஆகட்டும், இரண்டிலுமே இறந்தவர்களின் எண் ணிக்கை இது வரை சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. இந்த இரண்டு நிகழ்வுகளையும் ஒட்டி, சில நூறு சிங்களவர்களும், பல்லாயிர கணக்கில் தமிழர்களும் அரசியல் அகதிகளாக மேலை நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அவர்களில் எத்தனை பேருக்கு மாற்று பெயர் மற்றும் அடையாளங்களை அந்தந்த அரசாசங்கள் ஒழுங்கு செய்தன என்பது போன்ற தரவுகள் அவர்களிடமே உள்ளது.

அவர்களில் குறிப்பாக தமிழ் அகதிகளின் எண்ணிக்கை மற்றும் விவரங்களை அந்தந்த நாடுகள், இங்கே உள்ள அரசுகளுடன் பகிர்ந்து கொள்ள தயக்கம் காட்டுகிறார்கள். ஏன், இனப்போருக்கு பின்னர், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அமைக்கப்பட் நீதியரசர் பரணகமா தலைமையிலான விசாரணை குழுவிடமும் இந்த விவரங்களை அளிக்காமல், மேலை நாட்டு அரசுகள் விளையாட்டு காட்டின. ஆனால், பல்லாயிர கணக்கில், அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று மட்டும் அடம் பிடிக்கிறார்கள்.

### மஹிந்தா விட்ட பிழை

இனப்போரின் இறுதி நாள்களில் ஜோர்டான் நாட்டிற்கு மூன்று நாள் பயணம் செய்து திரும்பிய ஜனாதிபதி மஹிந்தா, கொழும்பு, காட்டுநாயகே விமான நிலையத்தில் வந்திறங்கியதும், தாய் மண்ணை, மண்டியிட்டு, முத்தமிட்டு வணங்கிய காட்சியை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அதை தொடர்ந்து. இனப்போர் முடிவுற்றதையும். விடுதலை புலிகள் அமைப்பு அழிவுற்றதையும் அவர் நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்ததும் செய்தியானது.

இனப்போர் முடிந்து விட்டது, இனி அமைதி திரும்பட்டும் என்று தேசம் மொத்தத்திற்கும் மஹிந்தா வெளியிட்ட அறிவிப்பு, வெற்றி வெறியில் விடுத்த செய்தி என்றே தமிழர்கள் கருதினார்கள். போரால் பாதிக்கப்பட்டிருந்து அவர்களில் பலரும் அவரது அந்த அறிவிப்பை தொலைகாட்சியில் காண முடியவில்லை. காரணம், அவர்களது முகாம்களில் தொலைகாட்சி பெட்டிகளும் இல்லை. உடைந்துபட்ட வீடுகளில் மின்சாரமும் இருக்கவில்லை. தமிழ் மக்களின் அன்றைய மனநிலையில் மஹிந்தா எதனை கூறியிருந்தாலும், ஏன் நாடாளுமன்றத்தில் தமிழ் எம்பிக்களின் காலில் அவர் விழுந்திருந்தாலும் கூட, அவரை மன்னிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, தமிழர் தரப்பில் யாரும் தயாராக இருக்கவில்லை.

என்றாலும், அன்றைய கால நேர சூழலுக்கு ஏற்ப, அதே அறிவிப்பில் மஹிந்தா, அப்பாவி தமிழர்கள், அநியாயமாக இறந்திருந்தால, அதற்கு தேசமும் அரசும் மன்னிப்பு கோருகிறது என்று ஒரு வசனம் கூட சேர்த்திருந்தால், அது பிற்காலத்திலாவது தமிழர் மனநிலையை ஓரளவாவது மாற்றியிருக்கலாம். ஆனால் அவர் அதனை செய்யவில்லை.

அது போலவே, உயிர் மற்றும் வீடு இழுந்த தமிழர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்கும் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் அன்றே அறிவித்து அதனை உளபூர்வமாக செயற்படுத்தியும் இருந்தால், ஐ.நா. மனித உரிமை சபையின் போர் குற்றங்கள் தொடர்பான முன்னெடுப்புகளும் முனைவுகளும் வீர்யம் குறைந்தே இருந்திருக்கும். ஆனால், ஏனோ, மஹிந்தா அதனை செய்யவில்லை.

அதற்கு தென்னிலங்கை அரசியல் மட்டுமல்ல காரணம். ஏன் என்றால், எப்போது விடுதலை புலிகள் அமைப்வு அவரது அரசியல் தலைமையில் அழித்து ஒழிக்கப்பட்டு விட்டதோ, அவர் முன் வைக்கும் எந்தவிதமான அடுத்த கட்ட நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ள தென்னிலங்கை தயாராகி விட்டது. மஹிந்தாவின் முடிவுகள் மீது அந்த மக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

ஏன், பிரபாகரன் வகையாறாக்களை உயிருடன் பிடித்து நீதிமன்றத்தின் முன்னால் கூட அவர் நிறுத்தி இருக்கலாம். அதனை நாட்டில் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். பாதுகாப்பாக ஆனால், எப்போது, பிரபாகரன் மற்றும் அவரது வல – இட கைகளை தங்களது நாட்டிற்கு கொண்டு சென்று, அவர்களை வைத்து இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில், சர்வதேச அரசியல் செய்ய வேண்டும், என்று அமெரிக்கா முதலிய நாடுகள் கருதி செயற்பட்டதோ, அப்போதே, அவர்களது இறப்பு சான்றிதழ் தயாராகிவிட்டது.

### தென்னிலங்கையின் கருத்து

அரசின் தற்போதைய முடிவு குறித்து தென்னிலங்கையின் கருத்தும் இன்னும் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக ஜேவிபியினரின் கருத்து இந்த விடயத்தில் முக்கியம் வாங்கியது. ஜேவிபிக்கு அப்பால் பிரிந்து சென்ற முன்னிலை சொலிசக் கட்சியின் கருத்துகளும் இந்த விடயத்தில் முக்கியம் வாய்ந்தது.

முழுவதுமாக ஜனநாயக பாதையில் தேர்தல் அரசியலை ஜேவிபி ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், தாய் கட்சி, புரட்சிபாதையில் இருந்து விலகி சென்று விட்டது என்று கூறும் முன்னிலை சொ–லிஸ்ட்கள், அரசின் முடிவை அப்பட்டமாக எதிர்க்கலாம். வெவ்வேறு காரணங்களுக்காக, தென்னிலங்கை இடதுசாரிகளும் தமிழர் தரப்புகளும் அரசின் இந்த முடிவை எதிர்க்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் தமிழர் தரப்பு, மற்றெல்லா முன்னெடுப்புகளையும் போலவே, நினைவு சின்னமும் சர்வதேசத்திற்கு சாக்குபோக்கு சொல்லும் அரசின் முயற்சிகளில் ஒன்றே என்றே கூறும். அதில் ஒரு நியாயம் இருக்கிறது.

தமிழர் தரப்பை பொறுத்த வரை எப்போது அரசு, தொடர்ந்து இனப்போர் வெற்றியை கொண்டாடும் விதத்தில் அதே மே 19 அன்று, தேசிய நினைவேந்தலுக்கு ஒழுங்கு செய்து வருகிறதோ, அப்போதே நினைவுசின்னம் சார்ந்த அதன் விளக்கம் அடிபட்டுப் போகிறது. இந்த ஆண்டும் ஜனாதிபதி ரணில் தலைமையில், பதினான்காவது நினைவேந்தலை அரசு அனுஷ்டித்ததே அதற்கு சான்று

அந்த விதத்தில், நாட்டில் உளபூர்வமாக நல்லிணக்கம் உருவாக வேண்டுமென்றால், அதற்கு அரசு மட்டும் முயற்சி எடுத்தால் போதாது. உதாரணத்திற்கு, அரசின் நினைவு சின்னம் குறித்த விடயத்தில், குறிப்பாக தமிழர் தரப்பு தனது பங்கிற்கு இணக்கப்பாட்டுடன் செயல்பட வேண்டும். உதாரணத்திற்கு, குறிப்பிட்ட அந்த தினங்களில் தங்களது வகையில் நினைவேந்தலை முன்னெடுப்பஷ்தையும் அதனை தமிழர் அரசியலின் ஆண்டாட்டுக்குமான நிகழ்சிநிரலில் ஒரு பகுதியாக அறிவிப்பதையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

தென்னிலங்கையினர் கேள்வி எழுப்புவது போல, முள்ளிவாய்க்காலில் உயிரிழுந்த அனைவருமே அப்பாவி தமிழ் மக்களா? அப்படியானால், அதே முள்ளிவாய்க்காலில் உயிரி ழுந்த பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுத போராளிகளையும் அப்பாவிகளாக தற்போதைய நிலைமையே தொடரும். அதன் பின்னர் நல்லிணக்கமாவது, ஒன்றாவது?




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 10 வியாழக்கிழமை 25.05.2023 கதிர் 68

## தமிழே உலகினது தொண்மை மொழி

### இந்தியப் பிரதமர் மோடி புகழாரம்

தமிழ் மொழிதான் இந்த உலகின் தொண்மையான மொழி என்று புகழாரம் சூட்டியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

மூன்று நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு இன்று காலை இந்தியா திரும்பிய பிரதமர் நரேந்திர மோடி டெல்லி விமான நிலையத்தில் கட்சித் தொண்டர்களிடம் பேசுகையில், தமிழ் மொழிதான் இந்த உலகின் தொன்மையான மொழி. அது ஒவ்வொரு இந்தியரின் மொழி

2☞

# வெடிகுண்டுப் புரளியால் இன்று வவுனியாவில் பெரும் பரபரப்பு

## பாடசாலைகளின் அருகே தீவிர பாதுகாப்பு



மாணவர்களை இலக்கு வைத்து குண்டுதாரிகள் வந்துள்ளனர் என்று பரவிய தகவலைஅடுத்து வவுனியா நகரப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பாடசாலைகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலத்திற்கு இன்று காலை சென்ற இருவர் பாடசாலைக் காவலாளியிடம் தம்மைப் பொலிசார் என அடையாளப்படுத்தியுள்ளனர்.

மாணவர்களை இலக்கு வைத்து இந்தப் பகுதிக்குள் இரண்டு குண்டுதாரிகள்நடமாடித்திரிகின்றனர் எனவும், இதனால் மாணவர்களைக் கூட்டமாக வெளியில் நடமாடித்திரிய அனுதிக்க வேண்டாம் எனவும் அந்த இருவரும் காவலாளியிடம் கூறிச் சென்றுள்ளனர் என்ற தகவலைப் பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தினார்.

இது குறித்து பாடசாலை நிர்வாகம் உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியது. இதையடுத்து வவுனியா நகரப் பகுதியில் இருக்கும் பாடசாலைகளின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலும் வவுனியா பாடசாலைகளுக்குபொலிஸ்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து மக்களோ மாணவர்களோ அச்சமடையத்தேவையில்லை எனவும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (100)

## வடக்கு ரயில் சேவை ஜூலை 15 முதல் மீண்டும் தொடக்கம்

எதிர்வரும் ஜூலை 15 முதல்வடக்குரயில்சேவையை மீண்டும் தொடங்க முடியும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினமே கொழும்பு முதல் காங்கேசன் துறை வரையில் ரயில் சேவையைத் தொடங்கக முடியும் என்று மஹவ – ஓமந்தை ரயில் வீதி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் அசோக முனசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் முதல் வவுனியா வரையான ரயில் மார்க்கத்தின் திருத்தப் பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன. குறித்த மார்க்கத்தின் திருத் தப் பணிகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன.

முதலாவது கட்டம் நிறைவடைந்துள்ளதுடன், இரண்டாம் கட்டம் காலநிலையைக் கருத்தில்கொண்டு இடைநிறுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீண்டும் அடுத்த வருட முற்பகுதியில் இரண்டாம் கட்டத்திருத்தப் பணிகள் தொடங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்று மஹவ – ஓமந்தை ரயில் வீதி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் அசோக முனசிங்க மேலும் தெரிவித்தார். வடக்கு தொடருந்து மார்க்கத்தின் திருத்தப் பணிகள் காரணமாக தற்போது வடக்கு ரயில் சேவை கொழும்பு – கோட்டையிலிருந்து அனுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

## வடக்கு குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வை அடைய முழு ஒத்துழைப்பு

### அமைச்சர் ஜீவன் உறுதியளிப்பு



வடக்கு மாகாணத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளும் நிச்சயம் வழங்கப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நீர்வ-ழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், அமைச்சர் ஜீவன் தொண்டமானை நேற்றுச் சந்தித்துப் பேசிய போது அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப் பிரிவின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்குக் குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன். வடக்கின் தற்போதைய நிலைவரம் பற்றியும் அவர் அமைச்சருக்கு தெளிவுபடுத்தினார்.

அவர் கூறிய விவரங்களைக் கேட்டறிந்துகொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், விரைவில் வடக்கு பகுதிக்கு நேரில் வருவார் எனவும், வடக்கு மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார் எனவும் உறுதியளித்தார் – என்றுள்ளது.

## அளம்பில் துயிலுமில்லக் காணி அளவீட்டுக்கு மக்கள் எதிர்ப்பு

### வந்த அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்

முல்லைத்தீவு – அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியினை, இலங்கை இராணுவத்தின் 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் பயன்பாட்டுக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்பட்ட முயற்சி அப் பகுதி மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் இன்று தடுத்து நிறுத்தப்பட்டது.

நில அளவை திணைக்களத்தினர் மற்றும், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், மாவீரர்துயிலுமில்லக் காணியினை அளவீடு செய்ய வந்தபோது அங்கு குழுமியிருந்த பொதுமக்கள்

2☞



## அமைச்சர் ஜீவன், ஆளுநர் செந்தில்

## தொண்டமான்கள் சம்பந்தனை நேரில் சந்தித்து நலம் விசாரிப்பு



தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தனை அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் நேரில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

சந்திப்பு தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சமூக ஊடகக் கணக்கில் பகிந்திருப்பதாவது:

நான், அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்து, நலம் விசாரித்தோம்.

இதன்போது மறைந்த தலைவர்களான சௌமிய-மூர்த்தி தொண்டமான் மற்றும் ஆறுமுகம் தொண்டமான் ஐயா காலத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையில் இருந்த வலுவான உறவு குறித்து நினைவூட்டினார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோ ரும் உடனிருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடப்பட்டது என்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் மனைவியும் கலந்துகொண்டார். (02)

# கலாசார அமைச்சர் – தமிழ் எம்.பிக்கள் தொல்பொருள் சிக்கல் குறித்துப் பேச்சு

(லோக தயாளன்)

வடக்கு கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தினரின் செயற்பாடுகளால் தமிழ்மக்களுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே இன்று சுமார் ஒன்றரை மணி நேரம் பேச்சு நடந்தது.

அமைச்சர் விடுத்த அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் ஆகியோர் பேச்சில் கலந்துகொண்டனர். தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்கவும் கலந்துகொண்டார்.

வடக்கு கிழக்கில் 60க்கும் மேற்பட்ட இடங்களைத் தொல்பொருள் திணைக்களத்தினர் தமது என்று அடையாளப்படுத்தி இருப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அந்த இடங்களின் பட்டியல் விவரத்தையும் அமைச்சரிடம் கையளித்தார்.

"இந்தச் சந்திப்பில் சில விடயங்களைச் செய்வதற்கு அமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார். எனினும் அவை நிறைவேற்றப்பட்டால்தான் நம்பிக்கைகொள்ள முடியும்" என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன். வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பிலான பிரச்சினை நீதிமன்றத்தில் உள்ளதால் நீதிமன்ற வழக்கு முடிந்த பின்னர் அது பற்றி ஆராயலாம் என அமைச்சர் இந்தச் சந்திப்பில் தெரிவித்திருக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டம் குறுந்தூர்மலைப் பகுதியில் தொல்லியல்த் திணைக்களத்தின் கடிதமே மக்களின் வாழ்வாதாரச் செயல்பாட்டிற்கான விவசாயச் செய்கைக்கு தடையாக அமைவதனால் அக்கடிதங்களை உடன் இரத்துச் செய்து அப் பகுதிகளை விடுவித்து கடிதம் வழங்க வேண்டும் என இ.சாள்ஸ் நிர்மலநாதனின் கோரிக்கை அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் தொல்லியல் திணைக்களத்திற்குத் தேவையல்ல என்றும் அங்கு தொல்லியல் அடையாளங்கள் ஏதாவது தென்படின் அவை குறித்துத் திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும் என்று தெரிவித்து உடனடியாக ஒர் கடிதத்தை பிரதேச செயலகத்திற்கு வழங்கும்படி திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கேயே உத்தரவிட்டார் அமைச்சர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் சிவன்ஙாலயப்பகுதியைத் தொல்லியல் திணைக்களத்தினர் அளவீடு செய்வதில் விடாப்பிடியாக இருப்பது மக்களிற்குச் சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது அதனை உடன் நிறுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் விடுத்த போரிக்கையும் ஏற்று அந்த அளவீடு தேவையற்றது அதனால் அதனை மேற்கொள்ள வேண்டாம் என அதைச்சர் பணிப்புரை விடுத்தார். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் தொல்லியல்த் திணைக்களத்தினால் ஏற்படும் நெருக்கடிகள் மற்றும் இடையூறுகள் தொடர்பிலும் சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

இவை தொடர்பிலும் ஆராய்ந்து அடுத்த சந்திப்பில் பதிலளிப்பதாக அமைச்சர் பதிலளித்துள்ளார்.

### இலங்கையிலிருந்து வெளிநாடு சென்ற

# மற்றுமொரு வீட்டுப் பணிப்பெண் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து சாவு

மலேசியாவில் பணியாற்றி வந்த இலங்கையைச்சேர்ந்த வீட்டுப்பணிப்பெண் ஒருவர் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் இரண்டாவது மாடியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

குருநாகல்–கொபேகனே,அரலுகஸ்வெவ பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி, மாலபேயில் வசிக்கும் தனது நண்பர் ஒருவரின் ஊடாக சுற்றுலா விசாவில் இப்பெண் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், கடந்த 23ஆம் திகதி, வீட்டில் வேலை செய்ய முடியாத நிலையில் உள்ளார் எனவும், வேறு இடத்தில் தற்போது பணியில் இணைந்துள்ளார் எனவும் கணவரிடம் அப்பெண் தொலைபேசியில் தெரிவித்துள்ளார். இவ்வாறானதொரு பின்னணியில் அவர் அடுக்குமாடி குடியிருப்பொன்றின் இரண்டாவது மாடியின் ஜன்னலிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என்று நேற்றிரவு வீட்டாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது கணவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, அண்மையில் சிங்கப்பூரில் இலங்கைப் பெண் ஒருவர் அடுக்குமாடி குடியிருப்பொன்றிலிருந்து விழுந்து உயிரிழந்தார்.

புத்தளம்–மொடமுல்ல,உலவெலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண், தான் வேலை செய்த வீட்டில் உள்ளவர்களிடம் இருந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதாக முன்னதாகத் தெரிவித்திருந்தார் என்று வீட்டார் கூறியிருந்தனர். (02)

# ஆறுமுகம் தொண்டமானின் நினைவு கண்காட்சி திறப்பு









அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பிறந்த மற்றும் மறைந்த தினத்தை முன்னிட்டு இ.தொ.காவின் தலைமை காரியாலயமான சௌமியபவனில் அவரது ஞாபகார்த்த கண்காட்சி

இன்று திறந்து வைக்கப்பட்டது. இன்று முதல் ஒரு வாரக்காலத்துக்கு ஆறுமுகம் தொண்டமானின் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதையொட்டி பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

இராஜலட்சுமி ஆறுமுகன் தொண்டமான் அம்மையாரும் கண்டியிலுள்ள இந்திய துணைத் தூதரக உதவித் தூதுவர் கலாநிதி. எஸ்.ஆதிராவும் கண்காட்சியைத் திறந்தது வைத்தனர். தொண்டமானின் ஞாபகார்த்தமாக தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும், கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுசெயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாணத்தின் ஆளுநருமான செந்தில் தொண்டமான், தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், கட்சியின் பிரதித் தலைவர்களான கணபதி கனகராஜ் மற்றும் அனுஷியா சிவராஜா, தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், உப தலைவர் பிலிப்குமார், பிரதம சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கா.மாரிமுத்து, நிர்வாகச் செயலாளர், உப தலைவரும், சிரேஷ்ட தொழிலுறவு இயக்குநர் எஸ்.ராஜமணி, போசகர் பி.சிவராஜா, எக்ஸ்பிரஸ்

நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குமார் நடேசன், இலங்கை – இந்திய சமூதாய பேரவையின் தலைவர் சிவராமன், பேராசிரியர் ஏ.எஸ்.சந்திரபோஸ், இ.தொ.காவின் உப தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நாளை வெள்ளிக்கிழமை சௌமியபவனிலும், இ.தொ.காவின் பிரதேச காரியாலயங்களிலும்

அமரர். ஆறுமுகன் தொண்டமானுக்கு சாந்தி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

மே 29 அமரர்.ஆறுமுகன் தொண்டமானை கௌரவிக்கும் முகமாக முத்திரை வெளியீடு

இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் கொட்டகலையிலும் ஞாபகார்த்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சரின் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

# இலங்கைக்கு 2ஆம் தவணைக் கடன்: நான்கு விடயங்களில் சோதனைகள்!

### சர்வதேச நாணய நிதியம் அதிரடி நடவடிக்கை

சர்வதேசநாணயநிதியத்தின் இரண்டாவது தவணைக் கடனை இலங்கைக்கு வழங்குவதற்கு நான்கு விடயங்களில்சோதனைகள் ஆரம்பமாகியுள்ளன.

தேசியமற்றும்சர்வதேச கடன் மறுசீரமைப்பு, மத்திய வங்கியைச் சுயாதீனமாக்கும் சட்டமூலம், அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் மற்றும் அரச செலவு ஆகியநான்குவிடயங்களைச் சர்வதேச நாணய நிதியம் சோதிக்கின்றது.

இம்மாதம் 11 ஆம் திகதி இலங்கை வந்திருந்து நேற்றுமுன்தினம் 23 ஆம் திகதி வரை தங்கியிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் விசேட நிபுணர்கள் இந்தச் சோதனையைத் தொடங்கியுள்ளனர். (02)

### கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டு நடந்து சென்ற

# இரு இளைஞர்கள் ரயில் மோதி சாவு!

கையடக்கத்தொலைபேசியில் பேசிக்கொண்டு ரயில் மார்க்கத்தில் நடந்துசென்ற இரண்டு இளைஞர்கள் ரயில் மோதி உயிரிழந்துள்ளனர்.

இந்தப் பரிதாப சம்பவம் வெயாங்கொடை - வத்துருவ ரயில் நிலையத்துக்கு அருகில், இன்று அதிகாலை 5.45 அளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இரு இளைஞர்களின் வீடுகளும் ரயில் மார்க்கத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளது எனவும், அவர்கள் இன்று காலை சுற்றுலா செல்வதற்குத் தயாராகி வத்துருவ ரயில் நிலையத்தை நோக்கிச் சென்றுள்ளனர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும், இருவரும் கையடக்கத்தொலைபேசியில் பேசிக் கொண்டு நடந்து சென்ற போது, பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப்பயணித்த ரயில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

வெயாங்கொடை - வத்துருவ பிரதேசத்தைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடைய இளைஞர்களே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். (02)

# இந்திய அரசாங்கத்தின் ஆயுஷ் புலமைப் பரிசில்!

ஆயுஷ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023–2024 கல்வியாண்டில் பட்டப்படிப்பு முதல் கலாநிதி கற்கைநெறி வரையான பல்வேறு பிரிவுகளிலும் கற்க விரும்பும் இலங்கை பிரஜைகளுக்கு கீழ்வரும் கற்கைநெறிகளுக்கு கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் புலமைப் பரிசில்களை அறிவித்துள்ளது.

ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் பட்டப்படிப்பைத் தொடர விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகியவற்றில் சித்தி பெற்றிருக்கவேண்டியது அவசியமாகும்.

அதேவேளை, யோகாவில் விஞ்ஞானமானி மற்றும் கலைமாணி (யோக சாஸ்த்ர) ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவது ஒரு பிரிவில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் ஆயுர்வேதம், சித்த, யுனானி மற்றும் ஹோமியோபதி துறைகளில் பட்டப்பின்படிப்பைத் தொடர விரும்புவோர் இந்திய மருத்துவ மத்திய பேரவையால் அங்கீகரிக்கப்படுகின்ற பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டியது அவசியமாகும்.

மேலும், ஆயுர்வேத, யுனானி மற்றும் யோகா ஆகியவற்றில் கலாநிதி கற்கைநெறியைத் தொடர விரும்புவோர் குறித்த துறைகளில் இந்திய மருத்துவ மத்திய பேரவையால் அங்கீகரிக்கப்படுகின்ற இளமாணி மற்றும் முதுமாணி பட்டங்களை பெற்றிருக்க வேண்டும்.

இந்தப் புலமைப்பரிசில் திட்டங்கள் முழுமையான கற்கைநெறி கட்டணம் மற்றும் கற்கைநெறிக் காலம் முழுவதற்குமான மாதாந்த செலவின கொடுப்பனவுகள் அனைத்தையும் உள்ளடக்கியதுடன், இதற்காக தங்குமிட கொடுப்பனவு மற்றும் வருடாந்த உதவித்தொகை ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை ஞூளீளீயூ பு2பு தளம் ஊடாக (www.a2ascholarships.iccr.gov.in) எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு முன்னதாக பதிவேற்றம் செய்யவும்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவினை 0112421605, 0112422788, 0112422789 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும், edu.colombomea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் தொடர்புகொள்ளலாம். (05)

## அளம்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். காணியை இராணுவத்திற்காக சுவீகரிக்க அனுமதிக்கமுடியாதென வலியுறுத்தி தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் நில அளவைத்திணைக்கள அதிகாரியிடம் மக்கள் கையளித்தனர். அதனைத் தொடர்ந்து நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர். அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியினை



தற்போது 23ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். அங்கு இரணுவத்தினரால் விவசாயம் செய்யப்படுகின்றது. ஒரு பகுதி படையினரின் விளையாட்டு மைதானமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு பகுதியில் இராணுவத்தினரால் உணவகம் ஒன்றும் நடத்தப்பட்டுவருகின்றது.

துயிலுமில்லக் காணி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் வெளிப்புறத்தில் வீதியிலேயே வருடாவருடம் மாவீரர் நாள் அஞ்சலிகள் உறவுகளால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில் அண்மையில் குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியினை இராணுவத்தினர் வசமிருந்து விடுவிக்க அரசியல் பிரதிநிதிகள் அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் என வலியுறுத்தி மாவீரர்களின் உறவுகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட போவதாகவும் அறிவித்திருந்தனர்.

## தமிழே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவித்தார். ஜப்பான், பப்புவா நியூ கினி மற்றும் ஆஸ்திரேலிய ஆகிய நாடுகளுக்குப் பயணம் சென்றிருந்த இந்தியப் பிரதமர், இந்தப் பயணங்களை முடித்துக் கொண்டு இன்று காலை நாடு திரும்பிய பிரதமர் மோடி டெல்லி பாலம் சர்வதேச விமான நிலையத்தில் கட்சித் தொண்டர்களைச் சந்தித்தார்.

அப்போதே தமிழ் மொழியின் பெருமை பற்றி அவர் எடுத்துரைத்தார்.

தமிழ்மொழி நம்மொழி. அது ஒவ்வொரு இந்தியரின் மொழி. உலகின் தொன்மையான மொழி தமிழ் மொழி. அந்த மொழி தந்த திருக்குறளை பப்புவா நியூ கினி நாட்டில் தோக் பிசின் மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். அதை வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அது எனக்கு மகிழ்ச்சி அளித்தது என்றார்.

தென்மேற்கு பசிபிக் கடலில் உள்ள பப்புவா நியூ கினி நாட்டின் தலைநகர் போர்ட் மோரெஸ்பியில் இந்திய – பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு நடந்தது. இதில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக, பப்புவா நியூ கினியின் தேசிய மொழியான தோக் பிசின் மொழிக்கு மாற்றப்பட்ட திருக்குறளை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

# டிஜிற்றல் மயமாக்கப்படுகின்றன இலங்கையின் ரயில் சேவைகள்

## அமைச்சர் பந்துல தகவல்



புகையிரத திணைக்களம் கடந்த ஆண்டு மாத்திரம் 10 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. ஊழலற்ற வகையில் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டுமாயின் ரயில்வேத் திணைக்களம் அதிகார சபையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் ரயில் சேவைகள் டிஜிற்றல் மயப்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்களின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அசோக அபேசிங்க முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

நாட்டின் ரயில் பாதைகளின் மொத்த நீளம் 1620.8.57 கிலோமீற்றராக காணப்படுகிறது. மருதானை தொடக்கம் பெலியத்த வரை 246.5 கிலோமீற்றர் பாதையும்,மருதானை முதல் பதுளை வரை 356 கிலோமீற்றர் பாதையும்,களனி வழியில் 59.27 கிலோமீற்றர் பாதையும்,மருதானை முதல் புத்தளம் வரை 142.86 கிலோமீற்றர் பாதையும் இவ்வாறு காணப்படுகின்றன.

கரையோர ரயில் பாதையில் 04 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும், பிரதான பாதையில் 101 பாதுகாப்பற்ற கடவைகளும், களனி வழி பாதையில் 30 பாதுகாப்பற்ற கடவைகளும், புத்தளம் பாதையில் 34 பாதுகாப்பற்ற கடவைகளும் காணப்படுகின்றன.பாதுகாப்பற்ற கடவைகளுக்கு பதிலாக தற்காலிக தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு பதிலாக பாதுகாப்பான கடவைகளை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரயில் வீதி புனரமைப்புக்களுடன் கடவை திருத்தப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. ரயில்வேத் திணைக்களம் இலாபம் பெறும் நிறுவனமல்ல. கடந்த ஆண்டு மாத்திரம் 10 பில்லியன் ரூபா நட்டத்தை திணைக்களம் எதிர்கொண்டுள்ளது.

ரயில்வேத் திணைக்கள சேவைகளில் நிலவும் மோசடிகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாயின் பொது மக்களுக்கான சேவைகள் டிஜிற்றல் மயப்படுத்தப்பட வேண்டும். இதற்கமைய எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் ரயில்வே சேவைகள் டிஜிற்றல் மயப்படுத்தப்படும்.

ரயில்வேத் திணைக்கள கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமாயின் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இதற்கமைய 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டு ரயில் சேவை தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரயில்வேத் திணைக்களத்தை ஓர் அதிகார சபையாக மாற்றியமைத்தால் பாரிய முன்னேற்றத்தை அடைய முடியும். இதற்காக ரயில் சேவை தொழிற்சங்கங்களுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். ஆகவே முறையான மாற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

இதன்போது எழுந்து கேள்வியெழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக, பாடசாலை மாணவர்களின் பருவகால போக்குவரத்து அட்டையின் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளது. இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள் .இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பருவகால போக்குவரத்து அட்டைக்கு குறைந்த கட்டணம் அறவிடப்படுகிறது.

குறைந்த பஸ்களைக் கொண்டு பாடசாலை போக்குவரத்து சேவையை முன்னெடுக்க வேண்டுமா ?அல்லது கட்டணத்தை அதிகரித்து சேவையை விரிவுப்படுத்த வேண்டுமா ?என்ற இரண்டில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். – என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதி கொடுப்பனவு,விசேட சிறப்புரிமைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலை மாணவர்களின் பருவகால போக்குவரத்து அட்டையின் கட்டணத்தை அதிகரிப்பது முறையற்றது என்றார்.

இதன்போது குறுக்கிட்டு உரையாற்றிய சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதி ஏதும் அதிகரிக்கப்படவில்லை. காப்புறுதி தொடர்பில் பத்திரிகைகளில் வெளியான செய்தி பொய்யானது. – என்றார். (05)

# தமிழ் மாணவன் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனப் போட்டியில் சாதனை



சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை, இகல்வெல்லல் யார்க்கும் அரிது என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக ஒரு ஈழத் தமிழ் மாணவன் சர்வதேச அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளார்.

போருக்குள் பிறந்து, வளர்ந்து தாய் நிலத்தில் இருந்து அகதியாக தத்தளித்துச் சென்ற இந்த மாணவனின் சாதனை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்று வருகிறது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் கல்வி கற்றுவரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் மேனகா தம்பதிகளின் புதல்வனான அர்ச்சிகன் அமெரிக்காவில் உள்ள விண்வெளி குறித்த நிறுவனமான National Space Society (NSS) சர்வதேச ரீதியாக மாணவர்களிடையே நடத்திய போட்டியில் வெற்றி பெற்று ஈழத்தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

விண்வெளியில் மனிதர்களைக் குடியமர்த்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுசார் நுட்பங்களை உள்ளடக்கி, அவரது சிந்தனையில் உருவான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக தேசிய விண்வெளிச் சமூகம் (NATIONAL SPACE SOCIETY - NSS-என்எஸ்எஸ்) அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் 19 நாடுகளில் இருந்து 26725 பங்கேற்ற நிலையில், ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை என்எஸ்எஸ் அங்கீகரித்து, அவரை வெற்றியாளராக அறிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் உள்ள Texas மாநிலத்தில் என்எஸ்எஸ் அமைப்பின் தலைமையில் இந்த மாதம் இடம்பெறும் அறிவியல் மாநாட்டிற்கும் அவர் அழைக்கப்பட்டிருப்பதுடன், அங்கு உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.

இன்று சாதனை மாணவனாக பாராட்டுப் பெறும் அர்ச்சிகன் தாயகத்திலிருந்து தனது பெற்றோரோடு அனைத்தையும் இழந்து, வலிகளை மட்டுமே சுமந்து கொண்டு அகதியாக இந்தியாவிலே தஞ்சமடைந்திருந்தார்.

இம் மாணவனின் சாதனை எந்தச் சூழலிலும் சாதிக்க முடியும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இந்நிலையில் உலகம் முழுவதும் பல்வேறு தரப்பினரிடமிருந்து அர்ச்சிகனுக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. (05)

# கனடாவின் நிலைப்பாட்டை வெகுவிரைவில் முழு உலகும் பின்பற்றும் நிலைமை வரும்!

## சாள்ஸ் நிர்மலநாதன் எதிர்வுகூறல்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் பௌத்தமயமாக்கப்பட்டுள்ளது. மகாவலி வலயத்தில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் மகாவலி அதிகார சபையின் ஊடாக சிங்களக் குடியேற்றத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இதுவும் ஒருவகையான இன அழிப்பு செயற்பாடு என்பதை ஆட்சியாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கை தொடர்பில் கனடா குறிப்பிட்ட கருத்தை வெகுவிரைவில் முழு உலகும் குறிப்பிடும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனடா நாட்டு பிரதமர் ஜஸ்டின் ரூடோ குறிப்பிட்ட கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். இவரது கருத்தை கனடாவின் எதிர்க்கட்சித் தலைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கை தொடர்பில் கனடாவின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் புறக்கணித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இன அழிப்பு இடம்பெற்றது என்பது உண்மை. இலங்கை தொடர்பில் கனடா குறிப்பிட்ட கருத்தை எதிர்காலத்தில் அமெரிக்கா ,பிரித்தானியா உட்பட முழு உலகமும் குறிப்பிடும். ஆகவே முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை நடத்த அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகள் அதிருப்தியை வெளிப்படுத்தும் போது கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து அவர்களிடம் கண்டனம் தெரிவிப்பதால் நாடு என்ற ரீதியில் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். அனைத்து நாடுகளையும் பகைத்துக் கொண்டால் தனித்தே செயற்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் பௌத்தமயமாக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் உரிமைகள் மற்றும் காணிகள் திட்டமிட்ட வகையில் இராணுவத்தின் ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதுவும் ஒரு வகையான இன அழிப்பு என்றே குறிப்பிட வேண்டும்.

தமிழர்களுக்குச் சொந்தமான மகாவலி எல் வலயம் தற்போது ஜே வலயமாக வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபை ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் தீவிரப்படுத்தப்படுகிறது. – என்றார். (05)

# இலங்கையின் சட்டம் ஒழுங்குக்கு கட்டுப்பட சீனர்களுக்கு அறிவுறுத்து

## அந்த நாட்டுத் தூதரகம் விடுத்தது



இலங்கைக்கு விஜயம் செய்யும் அனைத்து சீன பிரஜைகளும் இலங்கையின் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு கட்டுப்பட வேண்டும் என இலங்கைக்கான சீன தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் சீன பிரஜை ஒருவர் இரண்டு கடவுச்சீட்டுகளுடன் இலங்கைக்குள் பிரவேசித்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர் பாக சீன தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

வர்த்தகம் .தொழில், கல்வி மற் றும் சுற்றுலா போன்றவற்றுக்காக இலங்கைக்கு வரும் அனைத்து சீன பிரஜைகளும் இலங்கையின் விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும் என அறிவித்துள்ளது.

இதன்படி இலங்கைக்கு வருகை தரும் சீனப் பிரஜைகள் இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் மத மற்றும் கலாசார பழக்கவழக்கங்களை மதிக்க வேண்டும் என்றும் தூதரகம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் இரண்டு கடவுச்சீட்களுடன் இலங்கை வந்த சீனர் தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் சீன தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (05)




# வீதி பாதுகாப்பு வாரத்தையொட்டி வவுனியாவில் பேரணி நடந்தது!

வீதி பாதுகாப்பு வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது. நேற்று (புதன்கிழமை) வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ. லோகேஸ்வரன் ஆலோசனையில் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் பாட சாலை முன்றிலில் ஆரம்பமாகி மணிக்கூண்டு சந்தி வரை சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது. குறித்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் பாடசாலை அதிபர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# உள்நாட்டு புத்தகப்பைகள், காலணிகள் விலைகள் குறைக்கப்பட உள்ளனவாம்

## ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தகவல்



*உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புத்தகப்பைகள் மற்றும் காலணி ஆகியனவற்றின் விலைகள் குறைக்கப்படவுள்ளன எனப் பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.*

*இதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் காலணி மற்றும் பைகளுக்கான விலை 10 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது.*

*நாட்டில் ஏற்பட்ட டொலர் பற்றாக்குறையைச் தொடர்ந்து காலணி மற்றும் பைகள் உள்ளிட்ட சில பொருள்களுக்கான இறக்குமதி இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(05)*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழும் மோடியும்

உலகின் தொன்மை மொழி தமிழே என்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்திருக்கிறார். தென்மேற்கு பசிபிக் கடலில் உள்ள பப்புவா நியூ கினி நாட்டின் தலைநகர் போர்ட் மோரெஸ்பியில் இந்திய – பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு நடந்தது. இதில் பிரதமர் மோடி பங்கேற்றார். இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக, பப்புவா நியூ கினியின் தேசிய மொழியான தோக் பிசின் மொழிக்கு மாற்றப்பட்ட திருக்குறளை வெளியிட்ட பின்னர் நாடு திரும்பிய நரேந்திர மோடி தலைநகர் டில்லியின் பாலம் வானூர்தி நிலையத்தில் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மொழி நம் மொழி. அது ஒவ்வொரு இந்தியரின் மொழி. உலகின் தொன்மையான மொழி தமிழ் மொழி. அந்த மொழி தந்த திருக்குறளை பப்புவா நியூ கினி நாட்டில் தோக் பிசின் மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். அதை வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அது எனக்கு மகிழ்ச்சி அளித்தது என்றிருக்கிறார் மோடி.

அவர் தமிழ் குறித்துப் பேசுவதும் தமிழின் பெருமையைப் பறைசாற்றுவதும் தமிழர்களாகிய எமக்கெல்லாம் அளவு கடந்த உற்சாகத்தைத் தருகின்றது என்பதில் சந்தேகமில்லை. மோடி தமிழ் குறித்துப் பேசுவதும், பன்னாட்டு அரங்குகளில் தமிழை எடுத்தாண்டு பெருமைப்படுத்துவதும் இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் அவர் தமிழைப் பெருமைப்படுத்தும் விதத்தில் பேசியிருக்கின்றார்.

அப்படி இந்தியத் தலைமை அமைச்சரால் புகழப்படும் தமிழ் மொழிக்கு இந்தியாவில் உரிய பெருமையும் ஆதரவும் கிடைக்கின்றதா? மோடி பன்னாட்டரங்கில் தமிழைப் பெருமைப்படுத்தும் அளவிற்கு இந்தியாவில் தமிழுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கின்றதா? உலகின் தொன்மைமொழியான தமிழை வளர்க்க இந்தியாவின் நடுவண் அரசு முழு மனதுடன் செயற்படுகின்றதா? என்ற கேள்விகளுக்கு இல்லை என்பதே தமிழ்நாட்டிற்குள் இருந்த பரவலாக எழுக்கூடிய பதில்.

இந்தியாவில் தமிழ் பெரும்பான்மை மக்களால் பேசப்படக்கூடிய மொழியல்ல. இன்னும் சொல்லப் போனால் இந்திய மக்கள் தொகையில் சுமார் 6 விழுக்காட்டினரே தமிழ் மொழியைப் பேசுவோராக இருக்கின்றனர். தமிழ் மொழியைப் படிப்பது தொழில் வாண்மைக்கு உதவாது என்று எண்ணுகின்ற நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டுப் பல காலமாகிவிட்டது. அந்தக் கருத்தியலை மாற்றி தமிழைக் காக்கவோ, தமிழ் மொழியை வளர்க்கவோ மோடி அரசு என்ன செய்திருக்கின்றது என்கிற கேள்வியும் இருக்கின்றது.

இன்னும் சொல்லப்போனால் தமிழ் மொழியை வளர்ப்பதல்ல, அதன் வளர்ச்சியைத் தடுப்பதிலேயே நடுவண் அரசு கவனமாக இருக்கின்றது என்கிற கண்டனக் குரல் தமிழ்நாட்டில் ஓங்கி ஒலிக்கிறது. தமிழின் தொன்மையை எடுத்தியம்பும் கீழடி அகழ்வாய்வுகளை நடத்துவதற்குத் தமிழர்கள் நீதிமன்றத்தை நாடவேண்டியிருந்தது என்கிற யதார்த்தத்தையும் புறக்கணித்துவிட முடியாது. வழக்கொழிந்து போய்விட்ட சமஸ்கிரதத்துக்கு வழங்கும் முக்கியத்து–வத்தைக்கூட வாழும் மொழியான தமிழுக்கு டில்லி ஆட்சி வழங்குவதில்லை என்கிற குற்றச்சாட்டும் பலமாக இருக்கின்றது

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பதைப் போல இந்தியத் தலைமை அமைச்சர் மேடையில் பேசுவதால் மட்டும் தொன்மைத் தமிழைக் காத்துவிடவோ வளர்த்துவிடவோ மாட்டாது. அதற்கான உண்மையான, நேர்மையான காரியங்களை இந்தியத் தலைமை அமைச்சர் முன்னின்று நடத்தவேண்டும்.

# சண்முகாவில் ஆசிரியை ஹபாயா அணிய இணக்கம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கச் சமிஞ்ஞை

## இம்ரான் எம்.பி. மகிழ்ச்சி தெரிவிப்பு



திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு எதிர்காலத்தில் ஹபாயா ஆடை தொடர்பில் எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தப்பட மாட்டாது என கூறி நல்லெண்ண அடிப்படையில் வழக்குகளை இணக்கமாக முடித்துக் கொள்ள விரும்புவதாக சண்முகா வித்தியாலயத்தின் அதிபர் தரப்பு நீதிமன்றில் முன்மொழிந்தமை மகிழ்ச்சியளிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த விடயம் தமிழ் பேசும் மக்களிடையே நல்லதோர் நல்லிணக்கத்துக்கான சமிஞ்ஞையாகத் தென்படுவதாகவும் இரு தரப்பாரும் விட்டுக்கொடுப்போடும், இணங்கியும் செல்வதன் மூலம் பலம் பெற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு தனது கலாசார ஆடையான ஹபாயாவை அணிந்து கொண்டு கடமையேற்கச் சென்ற ஆசிரியை பஹ்மிதா றமீஸ் அவர்களை கடமையேற்க விடாமல் தடுத்தமை தொடர்பில் பாடசாலை அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக தாக்கல் செய்–யப்பட்ட வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கருத்து தெரிவிக்கையில் –

கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் வாழ்கின்றனர். இங்கு பல சமய கலாச்சாரம் பின்பற்றப்படுகிறது. எனவே வெவ்வேறு இன அடையாளத்தை கொண்டவர்களாக இருந்தாலும் சரி, வெவ்வேறு சமயத்தை பின்பற்றினாலும் சரி, நமக்கிடையே புரிந்துணர்வும் சகிப்புத் தன்மையும் காணப்பட வேண்டும்.

திருமலை. சண்முகா ஹபாயா விவகாரமானது ஆரம்பத்திலேயே பேசி தீர்மானமொன்றிக்கு வந்திருக்கலாம். துரதிஷ்டமான சில நடவடிக்கைகள் பல கசப்பான அனுபவங்களை தந்து விட்டது. மீண்டும் மீண்டும் இவற்றை பேசிக்கொண்டிருப்பதை விடுத்து நாம் இணக்கமாக அடுத்த கட்டத்துக்கு செல்வது பற்றி சிந்திக்க வேண்டும்.

அத்தோடு ஆசிரியை பஹ்மிதா தமது உரிமைக்காக நீண்ட நாட்கள் போராடினார். அவரை பாராட்டாமல் இருக்க முடியாது. அத்தோடு அவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார். (05)

# மின்சார அமைச்சும் சுயாதீன ஆணைக் குழுவும் இணக்கப்பாட்டுடன் செயற்படுகின்றமை அவசியம்

## அமைச்சர் ஜீவன் வலியுறுத்து



நாடு நெருக்கடியான நிலைமையை எதிர்நோக்கும் போது சில இறுக்கமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டி நேரிடும். இப்போது மட்டுமின்றி நாடு சுதந்திரமடைந்த காலம் தொட்டு அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. அதனால் மின்சாரம் தொடர்பான அமைச்சும் சுயாதீன ஆணைக்குழுவும் இணக்கப்பாட்டுடன் செயற்படுவது அவசியமாகும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரைய–ாற்றுகையில் –

மின்சாரம் தொடர்பான அமைச்சும் சுயாதீன ஆணைக்குழுவும் இணக்கப் பாட்டுடன் செயற்படுவது அவசியம். அந்த வகையில் அதற்கு சிறந்த சுயாதீனமாக செயல்படக்கூடிய தலைவர் ஒருவர் அவசியமாகும்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாஸ உட்பட எதிர்க்கட்சியினர் விவாதத்தில் உரையாற்றிய போது முன்வைத்த கூற்றுக்களால் தவறான கருத்துக்கள் மக்களை போய் சேரக் கூடிய நிலை ஏற்படலாம்.

நாடு நெருக்கடியான நிலைமையை எதிர் நோக்கும் போது சில இறுக்கமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டி நேரிடும். இப்போது மட்டுமின்றி நாடு சுதந்திரமடைந்த காலம் தொட்டு அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுக்கும் வரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை அவ் வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படலாம்.

மேலும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பிளவு பட்டு செயற்படுவதை தவிர்த்து ஒற்றுமையுடன் செயற்படுவதே சிறந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ள முடியாதவை. தமிழ் முற்போக்கு கூட்டணி கட்சியில் அங்கம் வகிக்கும் சிலர் அவ்வாறான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூலமே அவ்வாறான கட்சிகள் உருவாகின என்பதையும் இவர்கள் மறந்து விடக்கூடாது. – என்றார். (05)

# வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு தபாலில் வந்த குஷ், கஞ்சா சிக்கியது

அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா–விலிருந்து கொழும்பு மத்திய தபால் நிலையத்துக்கு விமானம் மூலம் அனுப்பப்பட் 34.75 மில்லியன் ரூபா பெறுமதியான அமெரிக்க 'குஷ்' மற்றும் கஞ்சாப் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்கத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (சட்ட விவகாரங்கள்) சுதத்த சில்வா நேற்று (புதன்கிழமை) தெரிவித்தார்.

பொரலஸ்கமுவ, வெள்ளவத்தை, மினுவாங்கொட, வெலிசர, நுவரெலியா மற்றும் தலங்கம ஆகிய இடங்களில் உள்ள வீடுகளுக்கு முகவரியிடப்பட்டு அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா–விலிருந்து 10 பொதிகள் விமான தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.



ஆனால், இந்த பொதிகளை பெற்றுக் கொள்வதற்கு கொழும்பு மத்திய தபால் நிலையத்துக்கு எவரும் வராமை காரணமாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மற்றும் தபால் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் அங்கு பணிபுரியும் சுங்க அதிகாரிகள் பொதிகளை திறந்து பரிசோதித்தனர்.

இதன்போதே குறித்த பார்சல்களில் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

# வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பில் பெப்ரல் அமைப்பு மக்களுக்கு அறிவிப்பு

வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பில் இது வரையில் கிராம உத்தியோகத்தரிடமிருந்து எவ்வித அறிவித்தலும் கிடைக்கப் பெறாதவர்கள் 31ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரை அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகத்தை நாடி உரிய ஆலோசனைப் பெற்றுக் கொள்ளுமாறு பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பெப்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

மக்களின் இறையாண்மையின் ஓர் அங்கமான வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கு வாக்காளர்களாக அனைவரும் தம்மை பதிவு செய்வது கட்டாயத் தேவையாகும்.

வாக்காளர் பட்டியலில் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும் ஜனாதிபதித் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புகளில் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாவர்.

இதனால், மக்கள் இறையாண்மையின் கீழ் ஒவ்வொரு பிரஜைக்கும் வாக்களிக்கும் உரிமை இருந்தாலும், வாக்காளர் பதிவேட்டில் அவர்களது பெயர் இடம் பெற்றால் மட்டுமே அதைச் செயற்படுத்த முடியும்.

2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களை பதிவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் இதுவரையில் தொடர்புகொள்ளவில்லை எனில், 31ஆம் திகதிக்கு முன்னர் அவரை அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகத்தை நாட வேண்டும்.

அதே வேளை கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவர் இறந்து விட்டாலோ அல்லது வசிப்பிடத்தை மாற்றியிருந்தாலோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் இந்த ஆண்டு பதிவுக்கு தகுதி பெறாமல் இருந்தாலோ, அதனை கிராம அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.

பதிவு செய்தல் மற்றும் வாக்களிப்பது பிரஜைகளின் உரிமையும் மற்றும் பொறுப்புமாகும். – என்றுள்ளது. (05)

# முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்குரல் ஒன்று ஓய்ந்து போனது திறமை கொண்ட சமூகப்பற்றுள்ள முஸ்லிம் தலைவரே ஹமீட்

## சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அஞ்சலி



அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பொதுச்செயலாளர் நாயகம் சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் அவர்கள் காலமானதாக இன்று காலை வந்த செய்தியறிந்து பேரதிர்ச்சி அடைந்தேன். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்). இந்த செய்தியானது எங்களுக்கு மட்டுமல்ல இலங்கை முஸ்லிங்களுக்கே கவலையான செய்தியாக நான் பார்க்கிறேன் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வினைத்திறனான போக்கு கொண்ட வை.எல்.எஸ். ஹமீட் எனும் ஆளுமை பெருந்தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் முதலாவது நாடாளுமன்ற பிரவேசத்தின் பின்னர் பிரத்தியோக செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட காலப்பகுதில் பாடசாலை மாணவராக இருந்த எனக்கும் அவருக்கான நெருங்கிய உறவு ஆரம்பித்தது. அப்போதிருந்தே அவரை நான் கவனித்துள்ளேன். முஸ்லிங்களின் உரிமைகள் சாந்த விடயங்களில் நிறைந்த அக்கறையுடன் பணியாற்றிய ஒருவர். பெருந்தலைவர் அஷ்ரபின் மறைவுக்கு பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுடன் இணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு அதிலும் கிழக்கு மாகாண முஸ்லிங்களின் அதிகார அலகு சம்பந்தமாக, கரையோர மாவட்ட அலகு சம்பந்தமாக மட்டுமின்றி கல்முனை பிரச்சினைகளில் கூட இதயசுத்தியுடன் தனது இறுதி மூச்சி வரை இருந்தவர்.

குறிப்பாக இதுவிடயமாக இதயசுத்தியுடன் கூறப்போனால் கல்முனை முஸ்லிங்களின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதை உளமார சிந்தித்த ஒருவரே வை.எல்.எஸ். ஹமீட் அவர்கள். மிக அண்மையில் கூட நாங்கள் எதிர்கொண்ட கல்முனை விவகாரம் தொடர்பிலான வழக்கு தொடர்பில் அவரது வீட்டில் அவரை நானும், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மானும் சந்தித்து இரண்டு மணித்தியாலயங்களுக்கு மேலாக அவரது தெஹிவளை வீட்டில் கலந்துரையாடினோம். அப்போது கல்முனை முஸ்லிங்களின் இருப்புக்கான விடயங்களை மனம்விட்டு பேசிய அவர், சட்ட நுணுக்கங்களையும் எங்களுக்கு எடுத்துரைத்தார். அந்த சந்திப்பின் போதான நினைவுகள் என்னை மீட்டிக்கொண்டு இருக்கின்றன. இன்று அவர் எங்களோடு இல்லை என்ற விடயம் என்னைக் கடுமையாக கவலையடைய செய்கிறது. அண்மையில் கூட சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் ஊடாக வை.எல்.எஸ். ஹமீட் சுகயீனமுற்றிருப்பதை அறிந்து அவரை நேரில் சந்திக்க முயற்சித்து துரதிஷ்டவசமாக அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. மிகத்திறமையான மனிதர் அவர்.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டங்கள், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, பிராந்திய பிரச்சினைகள் உட்பட முஸ்லிங்களினது உரிமைகள் தொடர்பிலானதும் நாட்டின் சட்டங்கள் தொடர்பிலும் பல்துறை சார்ந்த விடயங்களில் நிறைந்த அறிவைக் கொண்டிருந்த சட்டமுதுமானியான வை.எல்.எஸ். ஹமீட், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராக இருந்து கட்டமைத்து உருவாக்கிய வினைத்திறன் கொண்ட முஸ்லிம் தலைமைகளில் ஒருவர். பல்துறைகளிலும் பிரகாசித்து எம்மைவிட்டு மறைந்த அவரின் இழப்பு இந்த நாட்டு முஸ்லிங்களுக்குப் பேரிழப்பாகவே நான் பார்க்கிறேன்.

அவரும் நானும் ஒரே பிரதேசத்தை சேர்ந்தவர்களாக இருந்து எதிரெதிர் முகாம்களில் நாங்கள் இருவரும் அரசியல் செய்திருந்த போதிலும் கண்ணியமான முறையில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது மட்டுமில்லாமல் ஒழுங்கான, கண்ணியமான அரசியல் நாகரீகங்களுடன் சரி, பிழைகளை சுட்டிக்காட்டிய அவரின் அரசியல் நடத்தைகளை நாங்கள் மறக்கமுடியாது. இவரது இழப்பு விசேடமாக கல்முனைக்கும், நாட்டு முஸ்லிங்களுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பில் துயருற்ற அவரது குடும்பத்தினர், நண்பர்கள், ஆதரவாளர்கள், எல்லோருடைய கவலையையும் நீக்கி இறைவன் நிம்மதியை கொடுக்க இறைவனைப் பிராத்திக்கிறேன். அவரது சமூகப்பணிகளை பொருந்திக்கொண்டு உயரிய சுவர்க்கமான ஜன்னத்துல் பிர்தௌஸை வழங்க எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (05)

# ஊடகவியலாளர்கள் இருவருக்கு விருது







மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் 2023 விருது வழங்கல் விழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதன் பிரதித் தலைவர் கலாநிதி எப்.எம்.சரீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்த விழாவுக்கு பிரதம அதிதியாக இந்திய நாட்டைச் சேர்ந்த ஆசிய நாடுகளுக்கான சேவைகள், அரசமைப்பு மற்றும் பாதுகாவலர் அமைப்பின் வெளியுறவு அமைச்சர் பி.ஐயப்பன் கலந்துகொண்டு சிறப்பித்தார். மேலும், இந்திய நாட்டின் சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் நிறுவுநரும் தலைவருமான டாக்டர் கே.எம். சென்தூர் பாண்டியன், சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் பிரதம ஆலோசகர் டாக்டர் மோகன் லால் அஜிகுமார் அத்மா உள்ளிட்ட பலர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தேசிய ரீதியில் திறமைகளை வெளிப்படுத்திவருகின்ற ஆளுமைகளை வருடாந்தம் கௌரவித்து வருகின்ற செயற்பாடுகளை மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பு தவறாது செய்து வருகின்றது. அதற்கினங்க, இந்த வருடமும் நாடளாவிய ரீதியில் 60 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பதக்கம், சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இம்முறை தெரிவுசெய்யப்பட்டவர்களில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பைல் இஸ்மாயில் கடந்த வருடம் சுற்றுச் சூழல் தொடர்பாக பல விழிப்புணர்வுக் கட்டுரைகளை தொடராக எழுதியமைக்காகவும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் திருமதி துஷ்யந்தி சுரேஸ் (துாரா) கடந்த வருடம் ஆயுர்வேத மருத்துவ மூலிகை கட்டுரைகளை தொடராக எழுதியமைக்காகவும் இரு ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (05)

# யாழில் ஆசிரியர் மீது மாணவன் தாக்குதல்!

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியொன்றில் பயிற்சி ஆசிரியரொருவர் மீது மாணவன் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கல்லூரியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதமும் இதே மாணவனால் பிரச்சினை ஏற்பட்டு ஆசிரியரொருவர் மீது குறித்த மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் நடந்த சம்பவம் தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக தொடர்ச்சியாக ஆசிரியர் மீதான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் இது ஆசிரியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவிக்கின்றது. (05)

# முஸ்லிம் சமூகத்தினர் இழந்திருக்கும் புலமைசொத்தே வை.எல்.எஸ்.ஹமீட்

பேச்சாற்றல், எழுத்தாற்றல், விவாதத்திறமை, சமூக உணர்வு, சட்ட தேர்ச்சி கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நாயகம் சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் காலமானதாக வந்த செய்தி பேரதிர்ச்சியாக உள்ளது என அல்–மீஸான் பௌண்டன், ஸ்ரீஜ்ணலங்கா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மும்மொழி ஆற்றல், வினைத்திறனான போக்கு கொண்ட வை.எல்.எஸ். ஹமீட் எனும் ஆளுமை முஸ்லிங்களின் பெருந்தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் பிரத்தியேக செயலாளராகப் பொறுப்பேற்று அப்போதிருந்தே முஸ்லிங்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் நிறைந்த அக்கறையுடன் பணியாற்றிய ஒருவர். பெருந்தலைவர் அஷ்ரபின் மறைவுக்கு பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர்களுடன் இணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு அதிலும் கிழக்கு, வடக்கு மாகாண முஸ்லிங்களின் அதிகார அலகு சம்பந்தமாக, கரையோர மாவட்ட அலகு சம்பந்தமாக மட்டுமன்றி தனது இறுதி மூச்சி வரை சமூக நலன் கொண்ட முஸ்லிம் அரசியல்வாதியாக இருந்தவர்.

முஸ்லிம் தனியார் சட்டங்கள், இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்ட பிரச்சினைகள் உட்பட பொதுமக்களினது உரிமைகள் தொடர்பிலானதும் நாட்டின் சட்டங்கள் தொடர்பிலும் பல்துறை சார்ந்த விடயங்களில் நிறைந்த அறிவைக் கொண்டிருந்த சட்ட முதுமானியான வை.எல்.எஸ். ஹமீட் அவர்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர்.

வினைத்திறன் கொண்ட முஸ்லிம் தலைமைகளில் ஒருவர். பல்துறைகளிலும் பிரகாசித்து எம்மைவிட்டு மறைந்த அவரின் இழப்பு இந்த நாட்டு முஸ்லிங்களுக்கு பேரிழப்பாகவே உள்ளது.

அவரின் இழப்பில் துயருற்ற எல்லோருடைய கவலையையும் நீக்கி இறைவன் நிம்மதியை கொடுக்க வேண்டும் என்றும் அவரது சமூகப்பணிகளை பொருந்திக்கொண்டு உயரிய சுவர்க்கத்தை வழங்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# குருந்தூர்மலையில் ரவிகரன், மயூரன் கைதுவழக்கு ஒக்.19இற்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் இலங்கைத்தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் மற்றும், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்ம நிலையில் வழக்கிலக்கம் பி1053ஃ22 என்னும் வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி சரவணராஜா முன்னிலையில் இன்று (வியாழக்கிழமை) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதிவான் குறித்த வழக்கினை எதிர்வரும் ஒக்ரோபர் 19 ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணையின்போது ரவிகரன் மற்றும் மயூரன் ஆகியோருக்கு ஆதரவாக நீதிமன்றிற்கு வருகைதந்த அனைத்து சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# பரீட்சையில் சித்தியடையத் தவறிய ஆசிரியர்களுக்கு விரைவில் பரீட்சை

## கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு

ஆசிரிய நியமனத்துக்காக, தேசிய கல் வியியற் கல்லூரிகளில் நடத்தப்பட்ட பரீட்சை களில் சித்தியடையாத ஆசிரிய பயிலுநர்க ளுக்கு மீண்டும் அந்த பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. வேலுகுமார் எழுப்பிய, தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சியினை நிறைவு செய்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் சித்தியடையாமல் இருப்பதால், அவர்கள் மீண்டும் தோற்றுவதற்கு இன்னும் ஒருவருடம் செல்லும் நிலை இருக்கிறது. அதனால் அதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா? என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்–

தேசிய கல்வியற் கல்லூரியில் 7800 பேர் பயிற்சியை நிறைவு செய்து நியமனத்தை எதிர்பார்த்துள்ளனர். அவர்களில் சுமார் 350 பேர் குறித்த பரீட்சையில் சித்தியடையாதுள்ளனர்.

எனவே, முதல் கட்டமாக 7500 பேருக்கு நியமனத்தை வழங்கியதன் பின்னர், எஞ்சிய 350 பேருக்கும் மீளவும் அந்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். அந்த பரீட்சையை காலந்தாழ்த்தாது எதிர்வரும் 3 மாதங்களுக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார். (05)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.05.2023 இல் வெளியிடப்பெற்றது.